# இன்று விபுலாநந்த அடிகளின் சிலை திறப்பு விழா


Registeredas a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் [49
போன்: 389

மலர் 11
இதழ்: 238
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 22 றஜப் 25 புதன்கிழமை [8-10-69]



ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம்
— ரூ. 18-00
ஆறு மாதம்
— ரூ. 34-00
ஒரு வருடம்
— ரூ. 66-00

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம்
— ரூ. 4-00
ஆறு மாதம்
— ரூ. 7-50
ஒரு வருடம்
— ரூ. 14-00
முற் பணம்
கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்


## அல்அக்ஸா மசூதி தீமூட்டு வழக்கு

# ரோகன் குற்றத்தை ஒப்புக் கொண்டார்

## விசாரணையில் திடீர் திருப்பம்

**ஜெருசலம், அக். 7**

**அல். அக்ஸா புனித மசூதிக்கு தீவைத்த குற்றச்சாட்டை மறுத்த டெனிஸ் மைக்கேல் ரோகன் இன்று தீ வைத்ததை ஒப்புக்கொண்டு விசாரணையில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தினர்.**

**தீ வைத்த சமயத்தில் தாம் சுயநிலையிலிருக்கவில்லையென்றும், அப்போது மனநோயாளராக இருந்ததாகவும் இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 23 வயது இளைஞரான இவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.**

தம் மீது சாட்டப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளையெல்லாம் நேற்று ரோகன் மறுத்திருந்தார். ஆனால் இன்று விசாரணை ஆரம்பமானபோது, ரோகன் மீது தெரிவிக்கப்பட்டிருந்த தீமூட்டிய குற்றச்சாட்டு உட்பட மற்றைய குற்றச்சாட்டுகளையும் இவர் சார்பில் ஆஜரான பிரபல இஸ்ரேலிய வழக்கறிஞர் ஒப்புக்கொண்டார்.

பதிகளின் முன்பாக இவ் விசாரணை நடைபெறுகிறது.

மைக்கேல் ரோகன் மீது தெரிவிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை நேற்றைய முதல் நாள் விசாரணையின் போது மறுத்த அவரின் வழக்கறிஞர், இன்று நீதிபதிகளின் முன் அவர் தீமூட்டியதை ஒப்புக்கொண்டு, அச்சமயத்தில் அவர் மனநோயாளராக இருந்ததால், அவர் தண்டனைக்குரியவ

உலக முஸ்லிம்களின் உள்ளங்களை பெருமளவு நோக வைத்த இந்த சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ஆட்டு ரோமம் வெட்டும்தொழிலாளியான அவுஸ்திரேலிய இளைஞரான மைக்கேல் ரோகன் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில், அவருக்கு 22 வருட கடூழியச்சிறைத் தண்டனை வழங்கப்படலாம்.

## மாவட்ட நீதிபதியின் வீட்டில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியின் வாசஸ்தலம களவாடுவதற்காக நேற்று நள்ளிரவுக்கும் அதிகாலைக்குமிடையில் திருடர்கள் சிலரால் உடைக்கப்பட்டதாக வடபகுதி பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாம் சங்கரப்பிள்ளை வீதியிலிருக்கும் தனது இல்லம் உடைக்கப்பட்டதாக மாவட்ட நீதிபதி ஜனுப் இஸ்மெயில் ஆனைக்கோட்டைப் பொலிசில் புகார்செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2-30 மணிக்கும் 4-30 மணிக்குமிடையில் நடைபெற்றதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

களவுபோன பொருட்கள் பற்றிய விபரம் எதுவும் இதுவரை தெரியப்படுத்தப் படவில்லை சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப் படவில்லை.

கைரேகை அடையாளங்களைப் பதிவுசெய்ய கைவிரல் அடையாள நிபுணர்கள் கொழும்பிலிருந்து அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராசா தலைமையிலான பொலிஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கா நி)

## உலக வழிகாட்டி இயக்கம்

# குன்றக்குடி அடிகளார் திறந்து வைக்கிறார்

வாமி விபுலாநந்த அடிகளாரின் திருஉருவச்சிலை திறப்பு விழா இன்று கோலாகலமாக நடைபெறுகிறது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் காரைதீவு கிராமாட்சி மன்றப் பணிமனைவளவில் இன்று மாலை 3 மணிக்கு சிலையைத் திறந்து வைப்பார்.

திறப்பு விழா நிகழ்சியில் மலரை, சிலைநிறுவனக் குழு செயலாளரும், மலர் ஆசிரியருமாகிய திரு ம சற்குணம் பீ. ஏ அறிமுகம் செய்து வைப்பார்.

முத்தமிழ் வித்தகனின் படிவ மலரின் ஆய்வுரையை வித்துவான் எப் எக்ஸ் சி நடராசா நிறைவேற்றி வைப்பார். திருமதி தம்பிப்பிள்ளை, நியாயவாதி கே



சுவாமி ஜீவனனந்தா, திருவாளர்கள் அருள்செல்வநாயகம், க. ஆறுமுகம், பூ. சுந்தரம்பிள்ளை, டாக்டர் வே. பஞ்சாட்சரம், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் திரு. சி. மூ. இராசமாணிக்கம், திரு கே டபிள்யு தெய்வநாயகம், ஜனுப் எம் எம் முஸ்தபா, ஜனுப் எம் ஏ மஜீத், மட்டககளப்பு மாகாண அதிபர் தேவநேசன் நேசையா, திரு கு தர்மரெத்தினம், எம் ஏ ஆகியோர் வி எம் சுப்பிரமணியம், திரு பொ செல்லத்துரை ஆகியோர் பிரதிகளை வாங்கி மலர் வெளியீடு நிகழ்சியை ஆரம்பித்து வைபபார்.

அடிகளாரின் சிலையை செதுக்கியவராகிய சிற்பி நல்லரெத்தினம் இன்றைய தினம் சிலை திறப்புவிழாவில் கௌரவிக்பப்படுவார், தொடர்ந்து சுவாமி விபுலாநந்தருடன் மிகவும் நெருங்கிப் பழகியவரும், சென்னை

### நிகழ்ச்சிகள்

இரண்டு நாள் நடைபெறும் முத்தமிழ் விழா நிகழ்சிகளில் முதல் நாளாகிய நாளைக் காலை, விபுலாநந்த மத்திய நூலகத்தில் மூதவை உறுப்பினர் மூ திருச்செல்செல்வம் விபுலாநந்த அடிகளாரைப் பற்றிய பொருட் காட்சியைத் திறந்து வைப்பார்.

ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயவளவில் நடைபெறும் மாலை நிகழ்ச்சி சாமித்தம்பியார் அரங்கில் நடைபெறும், 2 மணியளவில் ஆரம்பமாகும் உரையரங்கு புலவர் மணி ஏ பெரியதம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறும். ஆட்சிமன்ற உறுப்பினர்கள் பண்டிதர் கா பொ இரத்தினம், செ இராசதுரை, கலாநிதி சு வித்தியானந்தன் கலாநிதி கைலாசபதி, கலாநிதி பொ. பூலோகசிங்கம், வித்துவான்கள் எம்.எம். சி. நடராசா, க. செபரத்தினம் வீ சி கந்தையா, திருவாளர்கள் கை கணபதிப்பிள்ளை, அருள்தியாகராசா, ச. அம்பிகைபாகன், க நவசோதி, தென்புலோலியூர் மு கணபதிப்பிள்ளை, ஜனுப் ஏ எம் ஏ அஸீஸ் ஆகியோர் உரையரங்கில் கலந்துகொள்வர். கலைநிகழ்ச்சியுடன் நாளை 9-ந் திகதிய நிகழ்ச்சிகள் முடிவடையும்.

### 10ந்திகதி நிகழ்ச்சிகள்

மாதர் நிகழ்ச்சி கண்ணம்மையார் அரங்கில் காலை 9 மணிக்கு திருமதி கமலபூஷணி திருநாவுககரசு தலைமையில் நாளை மறுதினம் 10ந் திகதி ஆரம்பமாகும். பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திருமதி ரி. இராமச்சந்திரன், மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி கங்கேஸ்வரி கந்தையா, திருமதி பத்மாவதி பொன்னம்பலம் ஆகியோர் அன்றைய நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

மாலை 2 மணிக்கு சுவாமி நடராசானந்தா அரங்கில் கவியரங்கு ஆரம்பமாகும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. க. செ. நட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகார் செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2-30 மணிக்கும் 4-30 மணிக்குமிடையில் [illegible] லான பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கா நி)

[illegible] யெல்லாம் நேற்று ரோகன் மறுத்திருந்தார். ஆனால் இன்று விசாரணை ஆரம்பமானபோது, ரோகன் மீது தெரிவிக்கப்பட்டிருந்த தீமூட்டிய குற்றச்சாட்டு உட்பட மற்றைய குற்றச்சாட்டுகளையும் இவர் சார்பில் ஆஜரான பிரபல இஸ்ரேலிய வழக்கறிஞர் ஒப்புக்கொண்டார்.

ஜெருசலத்தில் மூன்று நீதி [illegible] தெரிவிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை நேற்றைய முதல் நாள் விசாரணையின் போது மறுத்த அவரின் வழக்கறிஞர், இன்று நீதிபதிகளின் முன் அவர் தீமூட்டியதை ஒப்புக்கொண்டு, அச்சமயத்தில் அவர் மனநோயாளராக இருந்ததால், அவர் தண்டனைக்குரியவரல்ல என்றும் கூறினர்.

[illegible] குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ஆட்டு ரோமம் வெட்டும்தொழிலாளியான அவுஸ்திரேலிய இளைஞரான டைக்கேல் ரோகன் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில், அவருக்கு 22 வருட கடூழியச்சிறைத் தண்டனை வழங்கப்படலாம்.

# உலக வழிகாட்டி இயக்கம்

யாழ்ப்பாணம், புதன்

'பெண் சாரணிகள் இயக்கம் என்பது ஒரு உலக வழிகாட்டி இயக்கமாகும். இதில் கலந்துகொள்பவர்கள் அனைவரும் அந்த நியதியில் சகோதரத்துவமாக இயங்கப்பழக வேண்டும்.'

யாழ். மாவட்ட சாரண இயக்க ஆணையாளர் திரு. ஜி ஜே அரசரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பெண் சாரண வழிகாட்டிகளின் வருடாந்தவிழா நேற்று மாலை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் வாசஸ்தலமான பழைய பூங்காவில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. அரசரத்தினம் மேலும் பேசுகையில் பெண் சாரணவழிகாட்டிகள் நாடெங்கும் விரிவுபட வேண்டுமென்றும் இதற்கு பெற்றோர்களின் ஒத்துழைப்பு அவசியம்என்றும்சொன்னார்.

வடபகுதி பெண் சாரண வழிகாட்டிகள் இயக்க பொறுப்பாளர் செல்வி தோமஸ்நன்றி தெரிவித்துப் பேசுகையில் திருமதி இராசநாயகத்தின் சேவைகளையும் பாராட்டினார்.

வழிகாட்டிச் சாரணர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (கா. நி.)

# கூட்டுத்தாபன ஊழியர் சம்பளம்: டிசம்பரில் இடைக்கால அறிக்கை

கோட்டை, புதன்

**அரசாங்க கூட்டுத்தாபன ஊழியரின் வேதனம், படிகள் சம்பந்தமாக விசேஷ குழு டிசம்பர் மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் இடைக்கால அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும். பிரதமர் டட்லி சேனநாயக்கா இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி நேற்று குழுவிடம் பணித்தார்.**

வேதனம், படிகள், வேலை நிபந்தனை ஆகியன பற்றி குழுவிடம் தமது கருத்துக்களைத் தெரிவிக்கவும், யோசனை தெரிவிக்கவும் கூட்டுத்தாபன ஊழியருக்கு இதன் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பதாக நேற்று வெளியிடப்பட்ட அரசாங்க அறிக்கையொன்று தெரிவித்தது.

விசேட குழுவினர் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தகும் விளைவிக்கக்கூடிய விதத்தில் கூட்டுத்தாபன ஊழியர் நடக்கக்கூடாதென்றும் இது சம்பந்தமான அரசாங்க அறிக்கை தெரிவிக்கிறது.

1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் பிரதமர் அரசாங்க ஊழியரின்வேதனம் சம்பந்தமாக அறிக்கை சமர்பிக்கும்படி சம்பளக் கமிஷனிடம் உத்தரவிட்டதையும், அந்த வாக்குறுதி காப்பாற்றப்பட்டதையும் அரசாங்கம் இவ்வறிக்கையில் நினைவு படுத்தியுள்ளது.

வே. பஞ்சாட்சரம், ஆட்சி மன்ற உறுப்பினர்கள் திரு. சி. மூ. இராசமாணிக்கம், திரு கே டபிள்யு தெய்வநாயகம், ஜனுப் எம் எம் முஸ்தபா, ஜனுப் எம் ஏ மஜீத், மட்டக்களப்பு மாகாண அதிபர் தேவநேசன் நேசையா, திரு கு தர்மரெத்தினம், எம் ஏ ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

5 மணியளவில் அடிகளாரின் படிவமலர் காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயவளவில் வெளியிடப்படும் மலர் வெளியீடு நிகழ்சிக்கு சுவாமி விபுலாநந்த சிலை நிறுவனத்துக்கு தலைவர் டாக்டர் மா. பரசுராமன் தலைமைதாங்குவார். சுவாமி அவர்களின் படிவ[illegible] ஆரம்பித்து வைப்பார்.

அடிகளாரின் சிலையை செதுக்கியவராகிய சிற்பி நல்லரெத்தினம் இன்றைய தினம் சிலை திறப்புவிழாவில் கௌரவிக்கப்படுவார், தொடர்ந்து சுவாமி விபுலாநந்தருடன் மிகவும் நெருங்கிப் பழகியவரும், சென்னை மாகாணத்திலேயே சுவாமி அவர்கள் யாழ் அரங்கேற்றத்தில் முக்கிய பங்கெடுத்தவருமான வித்துவான் க. வெள்ளைவாரணன் சிறப்பு சொற்பொழிவாற்றுவார், சங்கீத பூஷணம் க கணபதிப்பிள்ளை இசைவிருந்துடன் முதல்நாள் நிகழ்ச்சி முடிவடையும்,

[illegible] பொன்னம்பலம் ஆகியோர் அன்றைய நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

மாலை 2 மணிக்கு சுவாமி நடராசானந்தா அரங்கில் கவியரங்கு ஆரம்பமாகும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. க. செ. நடராசா தலைமையில் கவியரங்கு நிகழும்.

திமிலைத்துமிலன், திரு கா. சி. ஆனந்தன், திரு வை அ கைலாசநாதன், ஜனுப் ஆ மூ. ஷரிபுத்தீன், நீலாவணன் ஆகியோர் இதில் கலந்து கொள்வர் வித்துவான் சரவணமுத்தன் அரங்கில்நடைபெறும் கலைநிகழ்ச்சியுடன் விழா முடிவடையும்

# இடமாற்றத்துக்கு தமிழ் பொலிசார் எதிர்க்கின்றனர்

## தமிழ் தெரிந்தவர்களை அனுப்ப கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

வடக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் தமிழ் பொலிசாரை இங்கிருந்து இடமாற்றம் செய்ய எடுக்கப்பட்டுள்ள ஒழுங்குகளுக்கு அதே தமிழ்ப் பொலிசாரே ஆட்சேபம் தெரிவித்துள்ளனர் இவர்கள் தமது ஆட்சேபக் கடிதங்களை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்குக் கிடைத்துள்ள முதலாவது இடமாற்றப் பட்டியலின்படி இங்கிருந்து சுமார் 40 தமிழ் பொலிசார் வெளி மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்காக இங்கு வருபவர்களில் ஒருவர்கூட தமிழர் அல்ல.

இடமாற்ற உத்தரவுக்குள்ளாகியுள்ள சுமார் 25 தமிழ்ப் பொலிசார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு தனித்தனியே அனுப்பிவைத்துள்ள கடிதங்களில் தாம் மூன்று ஆண்டுகள் மட்டுமே இங்கு கடமையாற்றியுள்ளதாகவும் தாம் இன்னமும் கடமையாற்ற அனுமதி வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

வடக்கிலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் தமிழ்ப் பொலிசாருக்குப் பதிலாக இங்கு தமிழ் தெரிந்த பொலிசாரையே அனுப்பி வைக்குமாறு பொலிஸ் சுப்ரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கமும் பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார்.

இங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் தமிழ்ப் பொலிசாரில் பெரும்பான்மையோரும் மலைநாட்டுக்கே இடமாற்றம் பெற்றுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (கா. நி.)

### குருவணக்கம் குறைந்துவருகிறது

இமையாணன், செவ்.

'குருவணக்கமும் கீழ்ப்படியும் தன்மையும் அக்கால மாணவர்களிடையே இருந்து வந்தன. ஆனால் இக்கால மாணவர்களிடையே அவை குறைந்து வருவதை நாம் காணக் கூடியதாகவிருக்கிறது என உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி இராசம்மா செல்லத்துரை தமது 43 வருடகால சேவையினின்றும் இளைப்பாறுவதை முன்னிட்டு நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் பேசுகையில் ஆசிரியர்எஸ். பி. பொன்னம்பலம் கூறினர்.

### ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்' புதன்

யாழ்ப்பாண மாவட்ட சைவ நலன் புரிசங்கத்தின் ஆலோசனைக்கூட்டம் ஒன்று நாளை மாலை 5 மணிக்கு வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (கா. நி

### புதிய கட்சியில் சேருவார்?

கோட்டை, செவ்வாய்

கட்சி ஒழுங்கு விதிகளை அனுசரிக்காத காரணத்துக்காக ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலக்கப்பட்ட காலி மேயர் திரு. டபிள்யூ. டி எஸ். அபேகுணவர்த்தன சிங்கள மகாஜன பக்ஷியவில் சேரலாம் என அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

# உயர் கல்விக்கு மாணவருக்கு கடனுதவி

கோட்டை, செவ்.

உயர் கல்விக்குத் தகுதியுள்ளமாணவர்களுக்குகடன் வசதியளிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்த மாதத்திலிருந்து இந்த கடன் வசதி கிடைக்கும் மக்கள் வங்கி மூலம் கடன் உதவியைப் பெற்றுக்கொள்ளலாமென வும் வருடத்துக்கு 600ரூபாவிலிருந்து 1000 ரூபாவரை கடனுதவி வழங்கபடுமெனவும் வருடத்துக்கு 1800 வருமானமாகப் பெறும் பெற்றோரைக்கொண்டவர்களுக்கே இக்கடனுதவி கிடைக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கத்தியால் வெட்டினராம்

மல்லாகம், செவ்வாய்

"எதிரி எனது மச்சான், சம்பவதினம் மாலை எனது தம்பியார் எதிரியினுல் தாக்கப்பட்டதாக வீடு வந்து என்னிடம் கூறியதும் அது பற்றி விசாரிக்க எதிரியிடம் போனேன்: எதிரி என்னை வழியில் வைத்து பொல்லால் திடீரென தாக்கி தடுத்து நிறுத்தி கத்தியால் வெட்டி காயப்படுத்தினார். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு 12 தினங்கள் சிகிச்சை பெற்றேன்."

குப்பிளானைச்சேர்ந்த கே. பாலசுந்தரம் என்பவருக்கு இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 8-ம்திகதி கத்தியால் வெட்டி படுகாயப்படுத்தியதாக சுன்னாகம் பொலிஸார் எம். கந்தையா என்பவர் மீது தொடர்ந்திருந்த வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது காயமடைந்தவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

### ஆசிரியர் விசேட பதவிக்கான பரீட்சை

பருத்தித்துறை, திங்கள்

ஆசிரியரின் 1-ம், 2-ம், 3-ம் விசேடபதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 7-ம் திகதியன்று கொழும்பில் 22 ஸ்தானங்களில் ஆரம்பமாகின்றன.

சுமார் 50 ஆயிரம் ஆசிரியர் இப்பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்நேர்முகப் பரீட்சை சுமார் ஒன்றரை மாத காலம்வரை தொடர்ந்து நடைபெறும்.

# விபுலாநந்தர் எனும் தவக் குழந்தை

## பண்டிதமணியின் செய்தி

உரும்பராய், செவ்வாய்

'ஒருநாடுசெய்ததவத்தின் விளைவுக்குத்தக்கவாறு உயர்ந்ததோராத்மா தவப் பெற்றோர் வாயிலாக உதயஞ் செய்கின்றது. அத்தவக் குழந்தையின் ஒளி உலகம் உய்யும் நெறியைக்காணுவதற்கு உபகரிக்கின்றது. இது இயற்கை.

நாவலர் மறைந்து சில ஆண்டுகளாயின. பின் ஒரு சோதி மட்டக்களப்பிலே காரையம்பதியில் உதயமானது. அதன் ஒளிக்கிரணம் நகுலாசலந் தொடங்கி இமாசல பரியந்தம் பரவியது. தமிழுலகம் முத்தமிழ் வித்தகர் சுவாமிவிபுலானந்த அடிகள் என்று அந்த அருமந்த சோதியைக் கொண்டாடுகின்றது'

சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை நிறுவும் விழாவினையொட்டி விடுத்த ஒரு செய்தியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பண்டிதமணி அச்செய்தியில் மேலும் "சுவாமிகளின் வித்தகம் முத்தமிழுக்கும் அப்பாற்பட்டது. முத்தமிழிலும் இசைநாடகங்கள் என்போன்றோர்க்கு எட்டாதவை. இயற்றமிழே இவ்வியல்பினதென்று விளக்கஞ் செய்ய இயலவில்லை சுவாமிகளின் கவிதைகளிலே மதுவுண்ட வண்டு போல வசமிழந்து விடுவதுண்டு.

'வெள்ளை நிற மல்லிகை' தொடக்கம் 'துருவன் அனையன் ஒருவனீங்குளனல்' என வருங்கெம்பீரமான கவிதை பரியந்தம் சுவாமிகளின் கவிதைகள் முழுவதையும் தொகுத்ததொரு தொகை நூலைக் காண விரும்புகின்றேன். அத்தொகைக்கு விமரிசனம் ஒன்றுசெய்து அதன் மூலம் சுவாமிகளின் சிலைக்கு அஞ்சலி செய்வது என் பேராசை' என்கின்றார்.

### திரும்பவும் நியமனம்

கோட்டை, செவ்வாய்

தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த இலங்கை கடல் கடந்த சேவைப் பகுதியைச் சேர்ந்த திரு. ஸ்ரான்லி ஜயவீரா திரும்பவும் வேலைக்கு அவர்த்தப் பட்டுள்ளார்.

திரு. ஜயவீரா தற்காலிகமாக வேலை நீக்கப்பட்டு 3 வருடங்களாகின்றன. அவர் முன்னர் வெளிவிவகார அமைச்சின் இலங்கை இந்திய விவகாரப் பகுதியில் கடமையாற்றினர். இப்பொழுது திரும்பவும் அதே பகுதியிலேயே கடமையை ஏற்றுள்ளார்.

### பொலிசில் சேலைகள்

யாழ்ப்பாணம், புதன்

களவு சம்பந்தமாகக் கைதான ஒருவரிடமிருந்து மீட்கப்பட்ட விலையுயர்ந்தசேலைகள் தேடுவாரற்ற நிலையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் கிடக்கின்றன

அனுரதபுரத்திலுள்ள ஒரு வீட்டிலிருந்து இந்தச் சேலைகளை யாழ். பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு சார்ஜன்ட் திரு. தாமோதரம் மீட்டுள்ளார்.

ஒரு கூறைச் சேலையும், நான்கு விலையுயர்ந்த சேலைகளுமாக மொத்தம் ஐந்து சேலைகள் பொலிஸ் நிலையத்தில் கிடப்பதாகவும் அதன் சொந்தக்காரர்களை உடன் தொடர்புகொள்ளுமாறும் பொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர். (கா நி)

# இன்று 11 மணிக்கு விஜயலட்சுமி வருகிறார்

யாழ்ப்பாணம், புதன்

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் இன்று பகல்11 மணிக்கு விசேஷ விமானத்தில் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்குவார்.

விமான நிலையத்தில் இவருக்குமகத்தான வரவேற்பளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இன்றுபகல் யாழ்ப்பாணம் வந்துசேரும் ஸ்ரீமதி விஜயலட்சுமியின் இன்றைய நிகழ்ச்சிகள்.

மாலை 3.30 மணி: நகரமண்டபத்தில் நகர வரவேற்பு.

மாலை 6 மணி: வீரசிங்கம்மண்டபத்தில் சொற்பொழிவு.

இரவு 8 மணி: பாம் கோட்டில் இராப் போசன விருந்து. (கா. நி

### தகராறு தீர்க்க முயற்சி

பீகிங், அக். 7

ரஷ்யாவும் சீனாவும் தமது எல்லைத்தகராறுகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதற்காக விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றன இந்த பேச்சுவார்த்தை பீகிங்கில் நடைபெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வீடு

ஆஸ்பத்திரி வீதிக்குக் கிட்டயாழ்ப்பாணம் கோயில் வீதியில் 3 3/4 பரப்புக் கொண்ட நாலு அறைகள் சராச் மற்றும் சகல வசதிகளுடன் நவீன வீடு விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். 103/1, பேரின்பநாயகம் ஒழுங்கை, சுண்டுக்குளி. 1460

எல்லாத் தளபாடங்களுடனும் அச்சகமொன்று உடனடியாக விற்பனைக்குண்டு விபரங்களுக்கு விளம்பர இலக்கம் 1461C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1461

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடுகளான புதுமுறை மாதிரி கைவினுக்கள் 5-ம், 6-ம், 7-ம் வகுப்புகளுக்கு எல்லாப் பாடங்களுக்கும் மூன்றும் தவணைக்குரியன வெளிவந்துள்ளன. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் 1445

## தேவை

பெண்கள்

சாறிகுஞ்சம் கட்டத் தெரிந்ததாகவும், தையல் தெரிந்ததாகவும் வேண்டும். 11-10-69 முதல் நேரில் விண்ணப்பிக்கவும். த. சங்கரப்பிள்ளை பிறதர்ஸ், 149, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 1464

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றுக்கு கணக்கியல்தெரிந்த இலிகிதர் ஒருவர் தேவை. வயது (30—40) தட்டச்சு தெரிந்தவருக்கு விசேஷ சலுகைவழங்கப்படும். அனுபவத்தையும், எதிர்பார்க்கும்சம்பளத்தையும்குறித்து விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1462, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1462

நகை ஈடுபிடிக்கும் கடைக்கு ஐந்துவருஷத்துக்குக் குறையாத அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை தேவை. நம்பிக்கை நாணயத்துக்கு அத்தாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். உரிமையாளர். 52, ஜா-எல. 1458

## வேலை தேவை

ஆலைகளிலோ, வியாபார தொழில்ஸ்தாபனங்களிலோ அனுபவம் வாய்ந்த ஆங்கில தமிழ் கணக்காளருக்கு யாழ் நகரில் வேலை தேவை. விளம்பர இல. 1455, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1455

## கல்வி

கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை (1969) (சாதாரணம்) க்கான எண் கணித வகுப்பு காலை-மாலை இருவேளைகளும் நடைபெறும். சேரவிரும்புவோர் தொடர்புகொள்ளவும்: K S. திரவியம், இளைப்பாறிய தலைமையாசிரியர், 39, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். 1457

## நன்றி நவிலல்

வவுனியா சிவசக்தி உரிமையாளரும் வட்டுக்கிழக்கைச்சேர்ந்தவருமாகிய எஸ். அண்ணாமலையின் மனைவியின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியோர்க்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். எஸ் அண்ணாமலையும், உறவினரும். 1459


REGAL JAFFNA
Daily 4 shows

SPECIAL MISSION
LADY CHAPLIN
(Adults only)

ஸ்ரீ காலிங்கா
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
மகாதேவி

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45p.m
John Phillip Law,
Marisa Mell.
Terry Thomas
in
DANGER DIABOLIK
(Color/Scope)

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - கண்ணம்பா - கிரிஜா
நடித்த
மனோகரா
புதிய கொப்பி)

ராஜா


உதைபந்தாட்டம்:

# பரமேஸ்வரா வெற்றி

புத்தூர், செவ்.

பரமேஸ்வராக் கல்லூரியையும், உரும்பராய் இந்துக் கல்லூரியையும் சேர்ந்த 'பி' பிரிவுக் கோஷ்டியினரிடையே நேற்று முன் தினம் உதை பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. யாழ். விளையாட்டுச் சங்க ஆதரவில் நடைபெற்ற இப் போட்டி பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

3ம் பிரிவில் ஆட்டம் தொடங்கும் வேளை விளையாட்டு ரசிப்பாக இருந்தது பரமேஸ்வராக் கல்லூரியின் முன்னணி வீரர்கள் கோல்கள் போடுவதில் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டனர். 10 நிமிடங்களின் பின்னர் பரமேஸ்வராக் கல்லூரியின் மத்திய முன்னணிவீரர் தருமகுலசிங்கம் வெகு நுணுக்கமாகக் கோலைப் போட்டார். இடைவேளைக்குப்பின்னர்பரமேஸ்வராக் கல்லூரியின் காப்டன் சிவானந்தராசா அடுத்த கோலையும் போட்டார். இதன் பின்னர் இரு கரை வீரரும் பலமாகப் போட்டியிட்டும் உரும்பராய் இந்துக் கல்லூரி மாணவர்களால் ஒரு கோலும் போட முடியவில்லை. ஆட்ட முடிவில் பரமேஸ்வராக் கல்லூரி 2—0 கோல்களால் உரும்பராய் இந்துக் கல்லூரியை வென்றது. இவ்வாட்டத்துக்கு திரு. வில்வராசா மத்தியஸ்தம் வகித்தார்.

2ம் பிரிவில் ஆட்டம் தொடங்கியதும் பரமேஸ்வராக் கல்லூரியினர் அடுத்தடுத்த கோல் போடும் சந்தர்ப்பங்களை உரும்பராய் இந்துக் கல்லூரியின் கோல் காப்பு வீரர் திறமையாக விளையாடித் தடுத்து விட்டனர், சில நிமிடங்களில் பரமேஸ்வராக் கல்லூரியின் காப்டன் குகராசா வெகு சாதுரியமான ஒரு கோலைப் போட்டார். சிறிது நேரத்தில் இரு கோஷ்டியினதும் மோதலுக்கிடையே பரமேஸ்வராக் கல்லூரியின் மத்திய முன்னணி வீரர் மகாலிங்கசிவம் ஒருகோலைப் போட்டார். இடைவேளைக்குப் பின் இருபாலாரும் வெகு உற்சாகத்துடன் விளையாடினர் ஆட்ட முடிவில் இருபாலாரும் தலா இரண்டு கோல்கள் போட்டதால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது இப்போட்டிக்கு திரு. மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார். இறுதியில் நடைபெற்ற தேநீர் விருந்தில் இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெற்றன.

......

## அடிகளார் சிரமதானம்

ஊரதீவு, செவ்.

புங்குடுதீவு கிழக்குப் பகுதியிலுள்ள ஹரிஜனப் பகுதிக்குரிய குளத்தை ஆழமாக்கும் நோக்குடன் புங்குடுதீவு சர்வோதய சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட சிரமதான வேலையை தவத்திரு குன்றக்குடி அடிகளார் மண் வெட்டி ஆரம்பித்து வைத்தார். இதில் பல சர்வோதய அன்பர்களும் கலந்துகொண்டனர்.

— —

## பரிசு பெற்ற கவிஞர்களுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

''யாழ்ப்பாணப் பிராந்தியம் வரட்சியான, வளமற்ற பிராந்தியம். இங்குள்ள கவிஞர்களுக்குக் கவிதையே வர முடியாது என்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சாரார் கூறிய உப்புச் சப்பற்ற கருத்துக்கு மாறாக யாழ்ப்பாணக் கவிஞர்கள்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 8—10—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 நானிலச் சிந்தனை, 5-45 படத்திலிருந்து.

## நீதிப்பாடல் எழுத்துப் போட்டி

வத்தளை, செவ்

வத்தளை அரசினர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இந்துமாணவர் மன்றச் சார்பில் இந்து மாணவர்களுக்கிடையே நீதிப்பாடல் எழுத்துப் போட்டி' இந்து மாணவர் மன்றக் காப்பாளர் திரு. நா. க. தங்கரத்தினம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. பரிசு பெற்றோருக்கு இவ்வாண்டு நடைபெறும் 'சைவத் திருநெறி' விழாவில் பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறுவோர் விபரம் வருமாறு:

மேற்பிரிவு: செல்வன் செ. ரூபசிங்கம், செல்வி வாணி சிவதாசன், செல்வன் இ. பாலரஞ்சன், செல்வன் செ. பிரேமகுமார்.

மத்தியபிரிவு: செல்வி உதயராணி பொன்னுத்துரை, செல்வன் அரவீந்திரன் செல்வன் தே. தேவதேவபாலா, செல்வி காந்தி கந்தசாமி

கீழ்ப்பிரிவு: செல்வன் கு. ஸ்ரீகாந்தா, செல்வி சரஸ்வதி இராமையா, செல்வி சாந்தா சிவதாசன்.

— —

## நவராத்திரி கலைவிழா

உடுவில், ச

வழமைபோல் இவ்வருடமும் நவராத்திரி விழாவை நடத்துவதற்கு உடுவில் கிராமசபை கலைவளர்ச்சிக் கழகம் தீர்மானித்துள்ளது.

கி. ச. திரு. எஸ் முந்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நவராத்திரி ஒன்பது தினங்களையும் கிராமசபை திறந்தவெளியரங்கில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மானிப்பாய் மெமோரியல் மகா வித்தியாலய சைவ மாணவர்மன்றம் இம்மாதம் 18, 19, 20-ம் திகதிகளில் நவராத்திரி விழா கொண்டவுள்ளனர்.

— —

## தொற்று நோய் தடுப்பு மாநாடு

கோட்டை, செவ்.

மலேரியா தொற்றுநோய் சம்பந்தமாக ஆராய்வதற்கு கொழும்பில் அடுத்த மாதம் ஒருமகாநாடு நடைபெற விருக்கிறது. இம் மகாநாட்டில் 6 நாடுகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பலர் கலந்து கொள்வர்.

......

## [illegible] வென்றது

அல்லைப்பிட்டி, செவ்வாய்

# அனாதைக் குழந்தைகள் நிதிக்கு யாழ்ப்பாணத்தில் நாட்டிய விழா

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் சைவ நலன் புரிச்சபை நிதிக்காக அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நாட்டிய விழாவொன்று நடைபெற விருக்கின்றது. இதற்கென நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவுசெய்யப்பட்டது.

வடபகுதியிலுள்ள அனாதைக் குழந்தைகளின் நலனைக் கவனிப்பதற்காக வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலத்தைத்தலைவராகக் கொண்டு இச்சபை கடந்த மாத இறுதியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இச்சபை தனது முதலாவது வேலையாக திருநெல்வேலியில் சைவ அபிவிருத்திச் சங்கம் நடாத்திவரும் அனாதைக் குழந்தைகள் விடுதியைப் பொறுப்பெடுத்து, கட்டடங்களைத் திருத்தி இங்குள்ள பிள்ளைகளுக்குப் புனர்வாழ்வளிக்கவே இந்த நாட்டிய விழாவை நடாத்தவிருக்கின்றது.

வழக்கறிஞர்கள், அரசாங்க அதிகாரிகள், கல்லூரி அதிபர்கள், பிரமுகர்கள் பலர் இச்சபையில் சேர்ந்துள்ளனர் (கா. நி.)

## வெற்றி தோல்வி இல்லை

மல்லாகம், செவ்

மல்லாகம் விளையாட்டுக் கழகமும் பலாலி சென் செபஸ்தியான் விளையாட்டுக் கழகமும் கலந்து கொண்ட முதற்பிரிவு சினேகபூர்வமான உதை பந்தாட்டப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிந்தது இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல்கள் போட்டிருந்தன. போட்டிக்கு திரு கே மகாலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்

சுன்னாகம் கிழக்கு விளையாட்டுக் கழகத்திற்கும் மல்லாகம் விளையாட்டுக்கழகத்திற்குமிடையே நடைபெற்ற மற்றொரு இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் 2-1கோல்களால் மல்லாகம் கோஷ்டி வெற்றியீட்டியது திரு எஸ் சிவதில்லைநாதன் மத்தியஸ்தராகக்கடமையாற்றினர்

## வாளெலி விவசாய அறிவுப் போட்டி

புலோலி, செவ்வாய்

வடமராட்சிக் காரியாதிகாரியின் தலைமையில் வாளெலி விவசாய அறிவுப் போட்டி வடமராட்சியிலுள்ள விவசாய மாணவர்களிடையே நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் துன்னாலைகரவெட்டி கப்புதூ, குடத்தனை அம்பன் பகுதிகளிலிருந்து இருநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## கோவிலடியில் சாராயம் விற்றவருக்கு அபராதம்

வல்வெட்டித்துறை, செவ்.

நாகர்கோவில் கப்பல் திருவிழாவிலன்று கோவிலடியில் வைத்து சாராயம் விற்றதற்காக க. நவரத்தின

......

## தேடுவாரற்ற சைக்கிள் பொலிஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம், செவ்.

தேடுவாரற்றுக் கிடந்த 'றலி' சைக்கிள் ஒன்று பொலிஸாரால்கண்டுபிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. இச்சைக்கிள் களவாடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். 58664 என்ற இலக்கமுள்ள இச்சைக்கிளின்சொந்தககாரரை பொலிஸார் தேடுகின்றனர். (கா நி.

காலிமேயரை

## கட்சியிலிருந்து [illegible]க்கத்தீர்மானம்

கோட்டை, செவ்வாய்

ஐக்கிய தேசியக்கட்சியின் ஒழுங்கு குழு சனிக்கிழமையன்று கூடி காலிமேயர் திரு, டபிள்யு. டி. எஸ் அபேகுணவர்த்தனவைக்கட்சியிலிருந்து விலக்கி விடுவதாகத் தீர்மானித்துள்ளது.

கட்சி நியதிகளுக்குக் கட்டுப்படாமல் மறுபடியும் மேயர் தெரிவுக்குத்தோற்றுவதைத்தொடர்ந்தே திரு. அபேகுணவர்த்தனவின் மேல் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## மின்சாரம் கிடைக்கும்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலைப்பகுதிக்கான மின்சாரம் வழங்கும் வேலைகள் மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவ்வருட இறுதிக்குள் இப்பகுதிக்கு மின்சாரம் கிடைத்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐந்தாம் வகுப்புக்குரிய வினாப்பத்திரங்கள்

அரசாங்கத் திணைக்கள பாடத்திட்டத்தை மட்டும்அடக்கி N. P. T. A பரீட்சைக்கு ஏற்ற முறையில் எழுதப்பட்டவை. வே க. கந்தசாமி(புதுமைலோலன்) எழுதியவை:-

தமிழ்-சூழல்-ஆங்கிலம் சமயம்-கணிதம் என்பனவும்

செல்வி: பாத்திமா அப்துல்காதர் எழுதியது:

இஸ்லாம் என்பதும் விற்பனையாகின்றன!

மலிவு விலை

விற்பனையாளர்:

அன்பு புத்தகசாலை யாழ்ப்பாணம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ்ப்பாணம்.

## வித்தியாதிபதியை சந்திக்கமுடிவு

நயினாதீவு, செவ்வாய்

நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலய பெற்றார் ஆசிரிய சங்க வருடாந்தப் பொதுக்கூடம் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. செ. தில்லையம்பலம் தலைமையில் நடைபெற்றபோது பின் வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத்தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. செ. தில்லையம்பலம், செயலாளர்: திரு. த. பரநிருபசிங்கப் பொருளாளர்: திரு. நா. காராளபிள்ளை.

பற்றுக்குறையாசிரியர் சம்பந்தமாக பாடசாலைப் பெற்றோர் வட பிரதேச வித்தியாதிபதியுடன் கொண்ட எந்தவிதமான அஞ்சல் தொடர்க்கும் வடபிரதேச கல்விக் கிளை செவிசாய்க்காமல் இருப்பது பற்றியும் கவலை தெரிவிக்கப்பட்டது. வடபிரதேச வித்தியாதிபதியைப்பேட்டிகான ஏழு பேரைக்கொண்டதூதுக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

......

## சமமாகமுடிந்தது

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை சென் ஆன்ஸ் கோஷ்டிக்கும் என்றியரசர் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் இருதரப்பினரும் சமமாக மோதித்தலா 3 கோல்கள் போட்டனர். என்றியரசர் கல்லூரி மைதானத்தில் இவ்வாட்டம்நடைபெற்றது

## நிலையம்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை பெரிய விளான் கிராமசேவையார் கந்தோருக்கு அருகாமையில் பசுக்களுக்குசெயற்கைமுறை மூலம் சினைப்படுத்தும் நிலையம் ஒன்றுநிறுவப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலை தேவை**

ஆலைகளிலோ, வியாபார தொழில்ஸ்தாபனங்களிலோ அனுபவம் வாய்ந்த ஆங்கில தமிழ் கணக்காளருக்கு யாழ் நகரில் வேலை தேவை. விளம்பர இல. 1455, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1455



இன்றுமட்டும்

**வெஸ்லி சினிமா**

மானிப்பாய்

தினசரி 6-30, இரவு 10-00

9சிபோயா, போயா 2 30மணி

எம். ஜி. ஆர் - மாதுரிதேவி நடித்த

**என் தங்கை**



தினசரி 6-30, 9-30.

பிரிபோயா, போயா 2-30

சிவாஜி - கண்ணம்பா - கிரிஜா நடித்த

**மனோகரா**

புதிய கொப்பி)



**ராஜா**

யாழ்ப்பாணம்)

Daily at 4-45, 7 & 9-45 p.m.

Rogger Brown as a Gunfighter in

ARGOMAN THE FANTASTIC SUPERMAN

(Technicolor-scope)



**ராணி**

(யாழ்ப்பாணம்)

[தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி நிர்மலா சௌகார் ஜானகி நடித்த

# லக்ஷ்மி கல்யாணம்




இப்பொழுது நடைபெறுகிறது

**வெலிங்டன்**

[யாழ். நகர்]

கெப்பிட்டல் (கொழும்பு)

பிளாஸா (கொழும்பு)



ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ

நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி

வசந்தா ★ மனோகர்

நடித்த

ஜரிஸ் மூவிஸாரின்

# நீயும் நானும்


யாழ்ப்பாணம், புதன்

''யாழ்ப்பாணப் பிராந்தியம் வரட்சியான, வளமற்ற பிராந்தியம். இங்குள்ள கவிஞர்களுக்குக் கவிதையே வர முடியாது என்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சாரார் கூறிய உப்புச்சப்பற்ற கருத்துக்கு மாறாக யாழ்ப்பாணக் கவிஞர்கள் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிலேயே பரிசு பெற்று, யாழ்ப்பாணத்துக்கும் கவிதை வரும் என்பதைக் காட்டிவிட்டனர். இன்று அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற இலங்கை இறைவரிக் கழகம் நடாத்திய பரிசுப் போட்டியில் முதற்பரிசான தங்கப் பதக்கத்தையும், இலங்கைக் காந்தி நூற்றுண்டுவிழாக் குழுவினர் நடத்திய இசைக்கவிதைப் போட்டியில் முதற் பரிசான ஐந்நூறு ரூபாவையும் பெற்று யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர்களுக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர்.''

இவ்வாறு அண்மையில் பரிசு பெற்ற கவிஞர்களான அரியாலை வே. ஐயாத்துரை, கல்வயல் வே. குமாரசாமி ஆகிய இருவரையும் பாராட்டிப் பேசுகையில் கவிஞர் இ. நாகராஜன் தெரிவித்தார். இக்கூட்டம் யாழ்ப்பாணம் மலாயாகபே மேல்மாடியில் யாழ். இலக்கிய வட்டத் தலைவர் கவிஞர் வி. கந்தவனம் தலைமையில் நடைபெற்றது.

தமது தலைமையுரையில் கவிஞர் கந்தவனம் குறிப்பிட்டதாவது:-

யாழ் இலக்கிய வட்டத்தவர்கள் அண்மைக் காலத்தில் சாதித்துவரும் சாதனைகள் வட்டத்துக்கேபெருமையளிப்பதாகும். இத்தனைக்கும் அவர்கள் ஒவ்வொருவரும் சுயமுயற்சியும் சுயநம்பிக்கையும் கொண்டவர்களாகவே விளங்குவதுடன் அமைதியான முறையில் இலக்கியப் பணிசெய்பவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மீக நம்பிக்கையும் பண்பும் அவர்களை வழிநடத்துகின்றன.

திரு. மு. கனகராஜன், இரசிகமணி செந்திநாதன் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோரும் பாராட்டிப் பேசினர். கவிஞர் ஐயாத்துரை தனது பதிலை கவிதையிலேயே கூறினர். கவிஞர் வே. குமாரசாமி பதிலுரைத்தார்


**வின்ஸர்**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

எம் ஜி ஆர் - ஜெயலலிதா நடித்த

**புதிய பூமி**


இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நாளையசந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலின், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 புல்லாங்குழல், 10-30 செய்திச்சுருக்கம்.

விருக்கிறது. இம் மகாநாட்டில் 6 நாடுகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பலர் கலந்து கொள்வர்.

......

## கம்பன் வென்றது

அல்லைப்பிட்டி, செவ்வாய்

வேலணை மத்திய மகாவித்தியாலய 'ஏ' பிரிவு (கம்பன் கோஷ்டியினர்) கோஷ்டியினரும் 'பி' பிரிவு தெரிவுக்கோஷ்டினரும் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியொன்றில் மோதிக்கொண்டனர். ஈற்றில் 3-2 கோல்களால் ஏ பிரிவுக்கோஷ்டியினர் வெற்றியீட்டினர்.

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 22-ந் திகதி (8-10-69)

**மேஷம்-** இன்று சுவை தரும் நிகழ்ச்சிகள் இடம் பெறும் வெளியிடத்தில் இருந்து வியப்பூட்டும் செய்தி ஒன்று கிடைக்கலாம். இல்லத்தில்இனிமை தவழும். இன்று சுகபோக நாள்.

**ரிஷபம்-** பயன்தரும் பயணம் இன்று மேற்கொள்ளப் படலாம். பழைய நினைவுகள் தலைதூக்கும். வார்த்தையில் வசீகரமும், வாழ்க்கையில் சுவையான நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

**மிதுனம்-** சகோதரபாசம் தலைதூக்கிநிற்கும். பிதா வழிச்சுகம் கிடைக்கும். கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு. முதியவர் ஒருவரின் அறிவுரைகள் முன்னேற்றத்தையளிக்கும்.

**கடகம்-** பாதையில் பழுதுண்டு பகைவர்கள் காத்திருப்பர். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம். உணவு விஷயத்தில் கவனம்வேண்டும்.

**சிம்மம்-** முன்னேற்றம் தடைப்படும். குறுக்குவழி தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். எதேச்சாதிகாரப் போக்கால் சிலரை பகைத்துக்கொள்ளவும் நேரிடும். அமைதி நன்று.

**கன்னி-** மேலதிகாரிகளுடன்தொடர்புகொள்ளுவதற்கு இன்று நல்லநாள் இனசனங்கள் மத்தியில் செல்வாக்கு வளரும் குடும்பத்திலும்இன்பமான சூழ்நிலை தென்படும்.

**துலாம்-** துன்பத்தின் ரேகைகள் படரும். தூக்கம் கெடும். எதிர்பார்த்ததில் தடை ஏற்படும். மனதில் ஆத்திரம் அலைமோதும். வாகனச்சாரதிகள் மிகவும் நிதானத்துடன் இருக்கவும்.

**விருச்சிகம்-** கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும். வணிகர்களுக்கு வியாபாரவிருத்தியுண்டு. கல்வித்துறையின் முன்னேற்றம் தென்படும். அறிஞர்கள் ஆதரவும் தாராளமாகக்கிடைக்கும்.

**தனுசு-** அறவழியில் நாட்டம் செல்லும். வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும் இரக்க சிந்தனையின் மூலம் பொருட்செலவுண்டு சுற்றமனிதர்களின் வாழ்த்து கண்டிப்பாகக் கிடைக்கும்.

**மகரம்-** உறவாடிக்கெடுப்பதற்குப் பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும். பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும். சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

**கும்பம்-** சந்திப்பின்மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுவீர்கள். காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும். மகிழ்ச்சியான தினம்.

**மீனம்-** அரச பயத்திற்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளவேண்டாம். மின்னியல், பொறியியல், பகுதிகளில் கடமை ஆற்றுபவர்கள் மிகவும் கவனம் செலுத்தவும்.

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

## சாராயம் விற்றவருக்கு அபராதம்

வல்வெட்டித்துறை, செவ்.

நாகர்கோவில் கப்பல் திருவிழாவிலன்று கோவிலடியில் வைத்து சாராயம் விற்றதற்காக க. நவரத்தினராசா, இ. நவரத்தினசிங்கம், த. சங்கரப்பிள்ளை ஆகிய மூவருக்கும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா தலா ரூபா 100 அபராதம் விதித்துள்ளார்.

அதே தினத்தில் அவ்விடத்தில் சாராயம் விற்றதாக நி. முத்துத்தம்பி என்பவர்மீது சுமத்திய குற்றச்சாட்டிற்கு எதிரி கோட்டிற்கு வரத்தவறியதற்காக அவர் மீது மாஜிஸ்திரேட் வாரண்ட் பிறப்பித்துள்ளார்.

## விவசாயப்படை வீரர்கள் கவலை

விஸ்வமடு, செவ்.

விஸ்வமடு விவசாயப்படை முகாமில் 600 நாட்கள் பூர்த்தி எய்தியவர்களுக்கு கல்லோயாவில் காணி வழங்குவதற்கு விண்ணப்பிக்கும்படி விவசாயப்படைத் தலைமைப் பீடம் அறிவித்துள்ளது. இப்படிப்பட்ட ஒரு அறிவித்தலினல் விஸ்வமடு வீரர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். தமிழ்ப் பகுதியை விட்டு ஒரு சிங்களப்பகுதியில் காணிதருவதாக அறிவித்தல் விடுத்திருப்பது தங்களுக்குப் பெரிய கவலையை தருவதாக வீரர்கள் பொறுப்பதிகாரியிடம் தெரிவிக்க விருப்பதாகத் தெரிகிறது.

## மறைந்த கலைஞர்களுக்கு விழா

உடுவில், செவ்வாய்

ஈழத்தில் கலைவளர்ச்சிக்காகப் பாடுபட்டு மறைந்த கலைஞர்களுக்கு மாபெரும் கலைவிழா ஒன்று அடுத்த மாத முற்பகுதியில் உடுவிலில் நடைபெறஇருக்கிறது. உடுவில் கிராமசபைத் திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கான ஒழுங்குகளைக் கவனிப்பதில் திருவாளர்கள் என். ஆர். சின்னராசா, கலைமணி எஸ் வடிவேலு, எஸ். முத்துலிங்கம் ஆகியோர் கொண்ட குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இக்கலை விழாவின்போது கலைமணி எஸ். வடிவேலு இயற்றிய ''இலங்கையின் தமிழ் நாடகவரலாறு'' என்னும் புத்தக வெளியீடும் இடம்பெறும்.

இளவாலைப்பகுதிக்கான மின்சாரம் வழங்கும் வேலைகள் மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவ்வருட இறுதிக்குள் இப்பகுதிக்கு மின்சாரம் கிடைத்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நிலையம்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை பெரிய விளான் கிராமசேவையார் கந்தோருக்கு அருகாமையில் பசுக்களுக்குசெயற்கைமுறை மூலம் சினைப்படுத்தும் நிலையம் ஒன்றுநிறுவப்பட்டுள்ளது.

''பாடசாலைகளில்

# 'தமிழ் இசை ஆசிரியருக்கு போதியநேரம் வேண்டும்'

— உதவி மேயர்

யாழ்ப்பாணம், புதன்

'மறைமலை அடிகளாரது தனித்தமிழ் இயக்கம் தமிழ் மக்களிடையே எவ்விதம் தன்மானத்தையும், தன் இன உணர்வையும் வளர்த்ததோ அது போலவே அண்ணாமலையாரின் தனித்தமிழ் இசையும் தமிழரிடையே மான உணர்வையும், இன உணர்வையும் வளர்க்கப் பெரிதும் உதவியுள்ளது'.

இவ்வாறு நல்லூரில்நடைபெற்றுக்கொண்டிருக்கும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற ஆறும்நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆசியுரை வழ்ங்கிய யாழ்ப்பாணம் உதவி மேயர் திரு. ஆ. துரைராசசிங்கம் கூறினர்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது நாட்டில் தமிழிசை தழைக்கவேண்டுமாகில் தமிழிசை ஆசிரியர்களுக்கு பள்ளிகளில் வேலை கொடுப்பதுடன் திருப்தியடையாது, அவர்கள் தமது கலையைப் படிப்பிக்க போதிய வகுப்புக்கள் நேரசூசியில் வழங்கப்படுகிறதா என்பதை எமது கல்விப் பகுதியினர் கண்டிப்போடு அவதானிக்க வேண்டும்.

அநேக பாடசாலைகளில் மேலைநாட்டு இசை ஆசிரியர்களுக்கு செய்துகொடுக்கப்பட்டிருக்கும் வசதிகள் தமிழ் இசை ஆசிரியர்களுக்குச் செய்துகொடுக்கப்படுவதில்லை இப்பாகுபாடு நீங்க வேண்டும்.

ஆலயங்களில் ஆண்டவனுக்குச் செய்யப்படும் அர்ச்சனைகளே தமிழ் மொழியில் செய்யப்படும் காலம் இது. தமிழர் தம்மை தமிழர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படும்காலம் வந்துவிட்டது. தமிழ்க்கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் அண்மைக்காலங்களில் கௌரவிக்கப்படுவது இதற்குச் சான்றாகும் என்றும் கூறினர்.

## பொங்கல்

விஸ்வமடு, செவ்.

விஸ்வமடு விவசாயப்படை வீரர்கள் கடந்த வெள்ளியன்று அயலில் உள்ள மாணிக்கப் பிள்ளையார் கோவிலில் முதன்முறையாக ஒரு மாபெரும் பொங்கல் பொங்கி தங்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடினர். பல நாட்களாக தீர்க்கப்படாதிருந்துவந்த காணிப்பிரச்சனை இப்போது ஒருவாறு தீர்ந்துவருவதுதான் இப்பொங்கலுக்கு காரணமாம்.

## மரணத்தில் சந்தேகம்

யாழ்ப்பாணம், புதன்

ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கக்கொண்டு வந்த போது மரணமானாராம் வாலிபர் ஒருவர். இவரது மரணம் எழுப்பிய சந்தேகம் பொலிஸாரை புலன் விசாரணைக்குட்படுத்தியுள்ளது.

சோண்டாவிலுள்ள மில் ஒன்றில் கடமையாற்றியதாகக்கூறப்படும் வீரன் என்ற மலைநாட்டு வாலிபரே மரணமானவராவார்.

இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கவென வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்துக்குக்கொண்டு வரப்பட்ட போது மரணமானதாகவும், நோய் விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லையெனவும்ஆஸ்பத்திரி பொலிஸார் தெரிவித்தனர்.

வாலிபரின் உறவினர்களுக்கு மலைநாட்டுக்கு விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸார்விசாரணை நடாத்துகின்றனர்.

(கா. நி)

## யாருடையது?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மணிக்கூட்டுச்சந்திக்கு அருகாமையில் கண்டெடுக்கப்பட்ட கூப்பன் புத்தகம் தன்று எஸ். கந்தசாமி என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலிய ரடார், ஏவுகணைத்தளங்கள் மீது அரபுப் படைகள் கடும் தாக்குதல்

## 2 யூத விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன

கெய்ரோ, அக்டோபர் 7

**சூயஸ்கால்வ யின் பகுதியிலும், சைனாய்ப் பாலவனப் பகுதியிலுமுள்ள இஸ்ரேலிய ராணுவ நிலைகள்மீது ஐக்கிய அரபுக் குடியரசு விமானப் படையினர் மிகப்பெரிய தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள்**

இஸ்ரேலியரின் ரடார் நிலைகள், ஏவுகணைத் தளங்கள் முதலிய வற்றை அரபு விமானங்கள் தாக்கியதாகவும் சிலவற்றை முற்றாக அழித்துவிட்டதாகவும் எகிப்திய அதிகாரிகள் கூறினார்கள்.

தங்கள் தரப்பில் ஒரு விமானத்தை இழந்ததாகவும் இரண்டு இஸ்ரேலிய விமானங்களைச் சுட்டுத்தள்ளியதாகவும் அவர்கள் அறிவித்தனர்.

### பதில் தாக்குதல்

இஸ்ரேலியர் முன்னர் எகிப்திய நிலைகள் மீது நடத்திய தாக்குதல்களுக்கு எதிராகவே இந்தத்தாக்குதலை ஐக்கிய அரபுக்குடியரசு நடத்தியதாகக் கூறினர்

இஸ்ரேலிய நிலைகள் மீது சுமார் 20 அரபு மிக்விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலியர் கூறினர்.

### பாப்பரசரை எபான் சந்தித்தார்

இஸ்ரேலிய வெளிநாட்ட மைச்சர் திரு. அபா எபான் நேற்று வத்திக்கானில் பாப்பரசரைச் சந்தித்துப் பேசினார். பாப்பரசர் இவ்வாறு இஸ்ரேலிய அமைச்சர் ஒருவருக்குத் தரிசனம் கொடுத்தது இதுவே முதல் தடவையென்று கூறப்படுகின்றது

வத்திக்கான் இதனை உத்தியோகபூர்வமாக அங்கீகரிப்பதில்லையென்றும் ஆனால் மேற்காசியாவில் அமைதி ஏற்படவேண்டுமென்பதால் இந்த விசேஷ சலுகை அளிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பாப்பாண்டவரைத் தரிசித்துக் கருத்துப் பரிமாறல் செய்துகொள்வதற்காக அரபுத்தரப்பினருக்கும் இம் மாதிரி சந்தர்ப்பம் வழங்கப்படவிருப்பதாக அறியப்படுகின்றது

### அரபு மேயரை துரத்திவிட்டனர்

ஜெருசலம் பகுதியில் இஸ்ரேலியர் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள ரமேலா என்ற அரபுநகரின் மேயரை இஸ்ரேல் நாடு கடத்திவிட்டதாம் மேயரையும் மற்றும் 9 பேரையும் ஜோர்டான் எல்லைக்குக்கொண்டு போய் இஸ்ரேலியர் அங்கு விட்டுச் சென்றதாகவும் கூறப்படுகின்றது

## பள்ளிவாசலுக்கு தீ மூட்டிய வழக்கு

புனித அல் அக்ஸா பள்ளிவாசலுக்குத் தீமூட்டியதாக 28 வயதான மைக்கல் டென்னிஸ் ரோகன் மீதான வழக்கு திங்கட்கிழமை விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

ஜூரிகள் இன்றி மூன்று நீதிபதிகளின் முன் ஆரம்பமான இந்த விசாரணையில் ரோகன் தாம் குற்றவாளியல்லவென்று கூறினார்

'சேர்ச் ஆஃப் கோட்'(கடவுளின் ஆலயம் என்ற கிறிஸ்தவ மதப் பிரிவைச்சேர்ந்த ரோகன் மிகவும் பாதுகாப்பான சூழ்நிலையில் விசாரிக்கப்படுகின்றார். குண்டுகள் தாலும் இஸ்ரேலிய அதிகாரிகள் அசமந்தமாய் இருந்துவிட விரும்பவில்லை.

ரோகன் விசாரிக்கப்படும் நீதிமன்றத்தில் கைதிக்கூண்டுக்கும் பொதுமக்கள் இருக்கும் பகுதிக்குமிடையில்கண்ணாடிச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரி பாதுகாப்புடன் முன்னர் 'நாஸி' யுத்த கைதியான அடோல்ட் ஈச்மன் விசாரிக்கப்பட்டார். நீதிமன்றத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அப்பகுதியில் காவல் படையினர் ஆயுதங்களு

### இரகசியப்பேச்சு இல்லை

பாரிஸ், அக் 7

வியட்நாம் அமைதி பற்றி வடவியட்நாமுக்கும் அமெரிக்க அதிகாரிகளுக்குமிடையில்இரகசியமாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகக் கூறப்படுவதை பாரிஸ் அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் வடவியட்நாமின் முக்கிய அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார். இது அமெரிக்கரின் பிரசாரத்தந்திரம் என்று அவர் குறிப்பிட்டார்.

## பஸ்-ஜீப் மோதல்: 23 பேர் பலியாகினர்

சென்னை, அக்.7

மதுரைக்கருகில் நேற்று நடைபெற்ற பஸ்-ஜீப் மோதலில் இறந்தவர் எண்ணிக்கை 23 ஆகியுள்ளது. சம்பவம் நடந்தபோது ஸ்தலத்திலேயே 17 பேர் மாண்டனர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 6 பேர் மாண்டனர். மொத்தம் 58 பேர் பஸ்ஸில் பிரயாணம் செய்தார்கள். மதுரையிலிருந்து 120 கிலோ மீட்டர் தூரத்தில் இந்த விபத்து ஏற்பட்டது.

அண்ணா சிலை வழக்கு

## நகரசபை எதிர்த்து வழக்காடும்

சேலம், அக. 7

சேலம் பஸ்நிலையம் அருகே மறைந்த முதல் அமைச்சர் அண்ணா சிலை அமைக்க சேலம் நகரசபை அனுமதி அளித்ததும் சிலையை ஜனாதிபதி வி. வி. கிரி தலைமையில் முதல் அமைச்சர் கருணாநிதி திறந்து வைத்ததும் தெரிந்ததே.

அண்ணா சிலை அமைக்க அனுமதி அளிக்கும் வகையில் சேலம் நகரசபைநிறைவேற்றிய தீர்மானம் செல்லத்தக்கது அல்ல என்று ஹைகோர்ட்டில் நகரசபை காங்கிரஸ் உறுப்பினர் ஆர். வரதராசன் வழக்கு தொடர்ந்துள்ளார். இது பற்றி முடிவுஎடுக்க சேலம் நகரசபையின் அவசரக் கூட்டம் தலைவர் சி பழனியப்பன் தலைமையில்நடந்தது. கோர்ட்டில் தொடரப்பட்டுள்ள வழக்கை எதிர்த்து நகரசபையின் சார்பில் வாதாட வேண்டும். என்று தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானத்துக்கு ஆதரவாக 14 வோட்டுகளும் எதிராக 7 வோட்டுகளும் கிடைத்தன. தீர்மானம் நிறைவேறியதால் அண்ணா சிலை வழக்கை எதிர்த்து வாதாடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

## காந்திஜி கொலை பற்றிய விசாரணை அறிக்கை

புதுடில்லி, அக். 7

மகாத்மா காந்தி 1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந் திகதி கோட்சே என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து கொலை பற்றி விசாரணை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட விசாரணைக்குழு இந்த விசாரணையின் அறிக்கையை டில்லி அரசு உள்நாட்டு இலாகா மந்திரி சவானிடம் [illegible] ளது. இந்த அறிக்கை மொத்தம் 1300 பக்கங்களைக் கொண்டது. இந்த [illegible] என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

### பிர்லா நிறுவனங்கள் சோதனை

புதுடில்லி, அக். 7

பிரபல தொழில் அதிபர் பிர்லாவின் கம்பெனிகளில் வருமான வரி அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினார்கள். இதில் பல கடிதங்

சுன்னாகம் மயான கொலை வழக்கு:

## பொலிஸ் நாய் 1-ம் எதிரியின் வீடு நோக்கிச் சென்றது

### இன்ஸ்பெக்டர் சாட்சியம்

மல்லாகம், செவ்.

'சாட்சி தர்மலிங்கம் கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் அமீனிடம் அளித்த வாக்குமூலத்தைத் தொடர்ந்து கிளிநொச்சியில் குடிசையொன்றில் 1-ம் எதிரி மரப் பலகைமீது படுத்திருந்ததை பொலிஸ் கோஷ்டியொன்றுடன் சென்றபோது கண்டேன். இந்நேரம் தர்மலிங்கமும் குடிசைக்குள் நிலத்தில் நித்திரைசெய்துகொண்டிருந்தார், பொலிஸ் கோஷ்டியைக் கண்டதும் 1-ம் எதிரிஓடித்தப்ப எத்தனித்த சமயம் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.'

மல்லாகம் நீதிபதி திரு எஸ். ஆனந்த குமாரசாமி முன்னிலையில் சுன்னாகம்மயானக் கொலைவழக்கு தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர். ஏ. ஜேக்கப் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இன்ஸ்பெக்டர் ஜேக்கப் மேலும் தமது சாட்சியத்தில் கூறியதாவது: மே மாதம் 27-ம் திகதி காலை பொலிஸ் நிலையம் வந்த சுன்னாகம் பட்டினசபைசுகாதார பரிசோதகர் சுப்பிரமணியம் மயானத்தில் இனம் தெரியாத கருகிய நிலையில் சடலம் கிடப்பதாக தகவல் தந்தார்.

உடனே சார்ஜன்ட் சந்தியாப்பிள்ளை, கான்ஸ்டபிள் அல்டின் ஆகியோர் ஸ்தலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நான் மயானம் சென்று பார்த்த போது வாழைச்சருகு தண்டுகளால் எரிக்கப்பட்டு முகம் கருகிய நிலையில் சடலம் காணப்பட்டது. உடம்பு நிர்வாணமாக இருந்தது. கருகிய சேட் ஒன்று கைக்கு கீழே கண்டு எடுத்தேன். சடலத்தின் கழுத்தில் கயிறு இருக்கக் கண்டேன் மூக்கிலிருந்து ஏதோ வழிந்திருந்தது.

மயானத்துக்கு விசாரணை செய்யப் போனபோது பெரும் சனக்கூட்டம் குழுமியிருந்தது. பொலிசார் சடலத்தை பாதுகாத்தனர். சிவில் உடைதரித்த பொலிசார் தகவல் சேகரிக்க மக்கள் மத்தியில் உலாவினர் தகவல் தெரிந்தால் முன் வந்து கூறுமாறு சனக் கூட்டத்திலேயே கேட்டேன். ஒருவரும் தகவல் தர முன்வரவில்லை.

மயானம் கொண்டுவரப்பட்ட பொலிஸ் நாயிடம் கயிறு வழங்கப்பட்டு மோப்பம் பிடிக்க விடப்பட்டபோது நாய் ஒன்றை வழிப் பாதையால் சென்று மயானத்திற்கு அருகிலுள்ள 1-ம் எதிரியின் பெற்றோர் வீட்டுக்குச் சென்றது. வீட்டில் எவரையும் காணவில்லை. வீட்டை பரிசோதனை செய்தபோது தடயப் பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை.

பிரேத பரிசோதனையின் போது சடலத்தின் தலை, கைகள் வெட்டி எடுக்கப்பட்டு கொழும்புக்குப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின் சடலம் கிராமசேவையாளரிடம் புதைக்க கையளிக்கப்பட்டது. ஊரெழுவில் தோட்டமொன்றில் பற்றைக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த கோடரியொன்றை கண்டு எடுத்தேன். இதனை 1-ந் எதிரியின் தாயார் கையளித்தார். 6 ம் திகதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுன்னாகம் என்று விலாசமிடப்பட்ட கடிதமொன்றை கிருஷ்ணன் (1-ம் எதிரி) கையெழுத்துடன் பெற்றேன் அன்றைய தினம் கொழும்பிலிருந்து பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட இனம் தெரியாத சடலத்தின் உறுப்புகள் கே. சிறீஸ்கந்தராசாவினது என அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தொலைபேசிச் செய்தி கிடைத்தது.

கான்ஸ்டபிள் லயனல், மன்சூர் ஆகியோரும் சாட்சியமளித்தனர். இரு எதிரிகளும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டு மேல் விசாரணை இம் மாதம் 12-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் அட்வகேற் ஆர். ஈ. [illegible]

"கடலட்டைத் தொழில்

### சுரண்டும் வியாபாரிகள் ஒழிந்தனர்"

மானிப்பாய், செவ்வாய்

'கடலட்டை ஏற்றுமதி ஏகபோக உரிமையைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் அளித்துள்ளதால் தொழிலாளர்களைச் சுரண்டும் வியாபாரிகள் அகன்றுவிட்டனர்'' என வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர் திரு. ச. ஸ்ரனிஸ்லாஸ் வல்லன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அட்டைத் தொழிலை மேற்கொள்வதன் மூலம் அதிக பணத்தைச் சம்பாதிக்கலாம் என்றும் இதற்கு கடன் உதவியளிக்க கூட்டுறவு மாகாண வங்கியும், கடற்றொழில் திணைக்களமும் காத்திருக்கின்றது என்றும் மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

### விஸ்வமடு விவசாயிகள் சங்கடம்

விஸ்வமடு, திங்கள்

பள்ளக்காணி வைத்திருப்பவர்களுக்குத் திடல் பகுதியில் ஒவ்வொருவருக்கும் மூன்று ஏக்கர் வீதம் காணி தரப்படும் என்ற வாக்குறுதியின் பேரில் விஸ்வமடு விவசாயிகள் சிலர் தங்களுக்கு விருப்பமான திடல் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியைக் கூலி கொடுத்து வெட்டித் திருத்தி அமைத்தனர். இப்படியெல்லால் திருத்தி அமைத்துக் கொண்டிருக்கையில் திடீரென ஒருநாள் தலைமைப்பீடத்திலிருந்து காணியை திருத்தவேண்டாமென்றும், அவை தரப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து இவ்விவசாயிகள் உடுப்பிட்டித் தொகுதி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்தின் உதவியை [illegible]

### மரம் நாட்டுவிழா

அல்லைப்பிட்டி, செவ்வாய்

காந்திநூற்றாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வேலணை அராலி வெளியிலுள்ள 2 ஏக்கர் நிலத்தில் கனிதரு மரங்களும், நிழல்தரு மரங்களுமாக ஆயிரக்கணக்காக நாட்டப்பட்டன. இம் மரம்நாட்டு விழாவை விவசாயப்பகுதியினரும், தீவுப் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிபதிகளின் முன் ஆரம்பமான இந்த விசாரணையில் ரோகன் தாம் குற்றவாளியல்லவென்று கூறினர்

'சேர்ச் ஆஃப் கேட்'(கடவுளின் ஆலயம் என்ற கிறிஸ்தவ மதப் பிரிவைச்சேர்ந்த ரோகன் மிகவும் பாதுகாப்பான சூழ்நிலையில் விசாரிக்கப்படுகின்ருர். குண்டுகள் துளைக்கமுடியாத கண்ணுடி சுவர்களுக்குள் விசாரணையின் போது அவர் அமர்ந்திருந்தார்

**இவர் மத வெறியர் என்றும் இப்போது அல் அக்ஸா மசூதி இருக்கும் இடத்தில் சொலமன் ஆலயத்தைத் திரும்பவும் கட்டி எழுப்பினல் கிறிஸ்துவின் இரண்டாவது வருகையைத் துரிதமாக்கமுடியும் என்று நம்புகிறவர் என்றும் வழக்கை நடத்தும் இஸ்ரேலிய முடிக்குரிய வழக்கறிஞர் கோர்ட்டில் எடுத்துக் கூறினர்.**

ரோகனை எவரும் கொலை செய்ய எத்தனிக்கமாட்டார்கள் என்று தெரிந்திருந்துள்ளது.

இம்மாதிரி பாதுகாப்புடன் முன்னர் 'நாஸி' யுத்த கைதியான அடோல்ட் ஈச்மன் விசாரிக்கப்பட்டார். நீதிமன்றத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அப்பகுதியில் காவல் படையினர் ஆயுதங்களுடன் சுற்றிவந்து கொண்டிருந்தனர். 400 பத்திரிகையாளர்கள் வழக்கைப் பார்க்க வந்திருக்கிருர்கள். இவர்களுடன் வழக்கைப் பார்க்க வந்த எல்லா பொதுமக்களும் உள்ளே அனுமதிக்கப்படுமுன் சோதிக்கப்பட்டார்கள்.

### கைது

புனித அல் அக்ஸா மசூதிக்கு தீவைக்கப்பட்ட மறுதினம் ரோகன் கைது செய்யப்பட்டார். இந்தத் தீவைப்பு முஸ்லிம் உலகமெங்கும் ஆத்திரத்தைக் கிளப்பியது. ஜெருசலத்திலேயே அரபு இளைஞர்கள் ஆர்ப்பாட்டங்களையும் வேலைநிறுத்தங்களையும் நடத்திஞர்கள் அரபு நாடுகளில் புனித அல் அக்ஸா பள்ளிவாசலைப் பாதுகாப்பதற்காக புனித யுத்தத்துக்கு ஆயத்தமாகும்படி அழைப்புகள் விடுக்கப்பட்டன. அரபுக்களும், முஸ்லிம்களும் மண்டலசார்பற்ற மற்ற நாடுகளும் இந்தச் சம்பவத்துக்கு இஸ்ரேலியரே முழு பொறுப்பு என்று கண்டித்தனர்.

ஆனல் இப்போது நடைபெறும் விசாரணை இஸ்ரேல் மீதான அவநம்பிக்கையை உலகக் கண்களிலிருந்து நீக்கிவிட முடியும் என்று இஸ்ரேல் நம்புகின்றது

இந்த வழக்கில் பிராசிகூட்டராக அட்டோர்னி ஜெனரல் மெயர் ஷாம்கார் ஆஜராகின்ருர். ரோகன் சார்பில் பிரபல வழக்கறிஞர் யுட்சாஃப் ட்யூனிஃப் ஆஜராகின்ருர்.

---

ளில் கலந்துகொள்ளும் வடவியட்னல் முக்கிய அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார். இது அமெரிக்கரின் பிரசாரத்தந்திரம் என்று அவர் குறிப்பிட்டார்.

---

கொலை பற்றி விசாரணை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட விசாரணைக்குழு இந்த விசாரணையின் அறிக்கையை டில்லி அரசு உள்நாட்டு இலாகா மந்திரி சவானிடம் கொடுத்துள்ளது. இந்த அறிக்கை மொத்தம் 1300 பக்கங்களைக் கொண்டது. இந்த அறிகை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் வரை அதுபற்றிய விஷயத்தை தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

காந்திக்கு அரசு மேலுக பாதுகாப்பு அளித்திருக்ம் முடியும்'' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதற் கொண்டே காந்தியைக் கொலை செய்ய திட்டமிடப் பட்டது என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்த கொலையை பலர் சேர்ந்து நீண்ட நாட்களாக திட்டமிட்டு நடத்திஞர்கள் என்றும் அப்படி திட்டமிட்டு கொலை செய்ததை அரசு தடுக்க முடியுமா என்பது நிச்சயம் அல்ல

---

## நிறுவனங்கள் சோதனை

புதுடில்லி, அக். 7

பிரபல தொழில் அதிபர் பிர்லாவின் கம்பெனிகளில் வருமான வரி அதிகாரிகள் திடீர் சோதனை நடத்திஞர்கள். இதில் பல கடிதங்கள் கைப்பற்றப்பட்டன. இதையொட்டி இந்தியா முழுவதிலும் பிர்லாவுக்குச் சொந்தமாக உள்ள பல கொம்பெனிகளில் திடீர் சோதனை நடந்தது. அந்த கொம்பெனிகளைச் சேர்ந்த சில முக்கிய நிர்வாகிகளின் வீடுகளிலும் சோதனை போடப்பட்டது. 500 க்கும் அதிகமான அதிகாரிகள் இந்தச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். சோதனையில் ஏராளமான கடிதங்கள், தஸ்தாவேஜுகள் கைப்பற்றப்பட்டன. தொடர்ந்து சோதனை நடந்து வருகிறது.

.....

## விஞ்ஞானிகளுக்கு உதவும் மீன்கள்

லண்டன், அக்.7

ஸ்கொட்லாந்திலுள்ள ஒரு ஏரியில் நீந்தித்திரியும் மீன்களின் முதுகில் சிறு இயந்திர சாதனமொன்று இணைக்கப்படவிருக்கிறது.

மிக நுண்ணிய பாட்டரி மூலம் இயங்கும் இந்தஇயந்திரசாதனம், விஞ்ஞானிகளுக்கு மீன்கள் சாதாரணமாக நீந்தும்பொழுது எவ்வளவு சக்தியை உபயோகிக்கின்றன என்பதைக் கணக்கிட்டுச் சொல்லிவிடும்.

இதேபோன்ற 'சக்திகணிப்பிடும்' சாதனங்கள் விவசாயத்துறையிலுள்ள மிருகங்களுக்கும் ஏற்கனவே இணைக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டிருப்பினும், மீனைப்பெரிய அளவில் வளர்ப்பதற்கு, மீனின் சக்திப் பாவிப்புப்பற்றி அறிவது அவசியமாகிறது.

ஸ்கொட்லாந்திலுள்ள விடேர்லிங் சர்வகலாசாலையிலுள்ள ஆராய்ச்சிக்குழுவினர் தான் திட்டத்தை நடாத்தவிருக்கின்றனர்.

---

## பிரிட்டனில்பயிலு ஈழத்தவர்

லண்டன், அக்.7

யாழ்ப்பாணத்திலுள்ள அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் திரு. சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளை தற்சமயம் பிரிட்டனில் மூன்றுமாதப் பயிற்சியொன்றை மேற்கொண்டுள்ளார், லண்டனில் உள்ள காட்சிக் கருவி கல்விநிலையத்தில் இவர் இப்பயிற்சியைப் பெற்று வருகிருர்.

---

தலைமைப்பீடத்திலிருந்து காணியை திருத்தவேண்டாமென்றும், அவை தரப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து இவ்விவசாயிகள் உடுப்பிட்டித் தொகுதி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்தின் உதவியை நாடினராம், ஆனல் கடைசியில் இந்த முயற்சியும் பயனளிக்கவில்லையாம். இப்பொழுது தொடர்ந்து இதே விவசாயிகள் மேலும் காட்டை வெட்டித் திருத்தத் தொடங்கியுள்ளதை அறிந்த தலைமைப்பீடம் இன்னும் மூன்று மாத காலத்தில் தங்கள் உத்தரவுக்குப் பணியாவிட்டால் இலங்கை இராணுவத்தைஇவர்களுக்கெதிராக உபயோகிக்க நேரிலாமென்றும் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

---

## வேலை வாய்ப்புகள்

யாழ்ப்பாணம், புதன்

நீர்கொழும்பிலுள்ளகடற்ருெழில் பயிற்சி நிலையத்தில் இயந்திரதொழிலாளர் (மெக்கானிக்)பயிற்சிவகுப்புகள் தமிழ் மொழி மூலம் 70ம் ஆண்டு ஜனவரிமாதம் தொடங்கவிருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்கள் இவ்வருடம் நவம்பர் மாதம் 15ம் தேதிக்குமுன்னர் நீர்கொழும்புகடற்ருெழில் பயிற்சி நிலையஅதிபருக்கு அனுப்பப்படவேண்டும்.

பரீட்சை பகுதியில் உதவி அச்சாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இம்மாதம் 15ம் தேதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

இலங்கை இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பகின்றன. விண்ணப்பங்கள் இம் மாதம் 15ம் தேதிக்குமுன்னர் அனுப்பப்பட வேண்டும்.

இலங்கை அரசகடற்படையில் பண்டகசாலை உதவிப் பொறுப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இம் மாதம் 10ம் தேதிக்கு முன்னர்அனுப்பப்படவேண்டும்.

1970ம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ் மொழியில் தொடங்கவிருக்கும் கடற்ருெழிலாளர் பயிற்சி வகுப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வருடம் நவம்பர் 15ம் தேதிக்கு முன்னர் நீர்கொழும்பு கடற்ருெழில் பயிற்சிநிலைய அதிபருக்கு அனுப்பப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட வேலைகளுக்கான தகமைகள்பற்றிய முழு விபரங்களும் கடந்த மாதம் 26ம்தேதி வெளியான அரசாங்க வர்த்தகமானப்பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

---

அல்லைப்பிட்டி, செவ்வாய்

காந்திநூற்றுண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வேலணை அராலி வெளியிலுள்ள 2 ஏக்கர் நிலத்தில் கனிதரு மரங்களும், நிழல்தரு மரங்களுமாக ஆயிரக்கணக்காக நாட்டப்பட்டன. இம் மரம்நாட்டு விழாவை விவசாயப்பகுதியினரும், தீவுப் பகுதிக் காரியாதிகாரியும், வேலணைகிழக்கு கிராம சேவையாளரும் முன்னின்று நடாத்திஞர்கள். இவ் விழாவில் வேலணை மத்தியகல்லூரி, சரஸ்வதிவித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட, பொதுமக்களும் கலந்து கொண்டனர். அன்று வேலணைமத்திய கல்லூரியில் விவசாயப் பகுதியினரால் படக்காட்சியொன்றும் காண்பிக்கப்பட்டது.

---

## 'பலபிரச்னையை அரசாங்கம் சமாளிக்கிறது'

ஜா-எல, செவ்

கடந்த காலங்களில் எமது நாட்டுமக்கள் தங்கள் உணவுக்குப் பிறநாடுகளை நம்பியிருக்க வேண்டியிருந்தது. இதனல் நாட்டின்பொருளாதாரம் சீர்கேடான நிலையிலிருந்தது, ஆனல்இப்போது பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு பதவிஆசை பிடித்த பல அரசியல் வாதிகளின் எதிர்ப்புக்களையும் சமாளிக்க வேண்டியுள்ளது.

வெலிகம்பிட்டியா விவசாய நலநோக்குச் சங்கக் கூட்டத்தில் பேசிய உணவு விவசாய அமைச்சின் உதவி அமைச்சர் திரு பி.சி. இம்புலான மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

உலகில் எந்த நாட்டிலும் இலங்கையில் போன்று இலவசமாக அரிசி வழங்கப்படவில்லை. தேசிய அரசாங்கம் பதவிக்கு வரும்பொழுது முன்னைய அரசாங்கத்தினது சீர்கேடான நிர்வாகத்தால் நாட்டின் நிதிநிலை மோசமாகவிருந்தது. இன்று தேசியஅரசாங்கம் நாட்டின் நிலையான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கும் பதவி ஆசைபிடித்த பல அரசியல்வாதிகள் தடையாகவிருக்கிருர்கள். இவர்களின் எதிர்ப்பையும் அரசாங்கம் சமாளிக்க வேண்டியிருக்கிறது' என்றுகூறினர்,

---

கான்ஸ்டபிள் லயனல், மன்சூர் ஆகியோரும் சாட்சியமளித்தனர். இரு எதிரிகளும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டு மேல் விசாரணை இம் மாதம் 12-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் அட்வகேற் ஆர். ஈ. தம்பிரத்தினம், புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினம், புறடர் செல்லத்துரை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட் சில்வா வழக்கை நடாத்திஞர்.

மண்டதீவு வாசியான கே ஸ்ரீகாந்தன் என்பவரை கொலை செய்ததாக ரி-கிருஷ்ணன், என். தங்கராசா ஆகிய இருவர் மீது சுன்னுகம் பொலிஸாரால் இவ் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது,

---

## பிரிட்டிஷ் அமைச்சரவையில் மாற்றம்

லண்டன், அக். 7

பிரிட்டிஷ் மந்திரிசபையின் எண்ணிக்கை 23-லிருந்து 21-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. வில்சனின் இவ்வித நடவடிக்கையை பிரிட்டிஷ் பத்திரிகைகள் வரவேற்றுள்ளன. போக்குவரத்து அமைச்சராகப்பணியாற்றிய திரு மார்ஷ் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்.

---

## தடுப்பு மருந்து

அல்லைப்பிட்டி, செவ்.

வேலணைப்பகுதியைச்சேர்ந்த குழந்தைகளுக்கு ஊர்காவற்றுறை சுகாதார அதிகாரி தலைமையில் வீடுதோறும் சென்று இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து விநியாகிக்கப்படுகின்றது.

---

## இடமாற்றம்

பருத்தித்துறை, செவ்.

உரும்பிராய் இந்துக்கல்லூரிச்சரித்திர, ஆங்கில ஆசிரியர் திரு. வி. இளையதம்பி சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் திரு. ஏ. சின்னதம்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடிப் பட்டினசபை மத்திய நூல் நிலையப்பொறுப்பாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். கணேசானந்தம் அடுத்த மாதம் முதல் மன்னர் நூலகப்பொறுப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

### மத்திய அரசின்

# முற்போக்கு நடவடிக்கைகளை தமிழ்நாடு ஆதரிக்கும்

## பிரதமர் இந்திராவிடம் கருணாநிதி வாக்குறுதி

சென்னை, அக்7

**மத்திய அரசாங்கம் எடுக்கும் எல்லாவித முற்போக்கு நடவடிக்கைகளுக்கும் தமிழ் நாடு அரசு ஆதரவு அளிக்கும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் உறுதி கூறினர்.**

பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி நேற்றுமாலை புதுச்சேரியிலிருந்து தமிழ்நாடு திரும்பினர். சென்னையிலுள்ள ராஜாஜி மண்டபத்தில் அமரர் அண்ணுதுரையின் இரு உருவப்படங்களை திருமதி காந்திதிறந்துவைத்தார்.

திருமதி காந்தி, அண்ணுவின் உருவப்படங்களைத் திறந்துவைத்து உரையாற்றுகையில், ஏழை எளியவர்களிடம் அண்ணு பெரிதும் அன்பு கொண்டு உழைத்து வந்தார் என்ருர்.

நாட்டுப் பிரச்னைகளை திரு. அண்ணுதுரை நன்கு உணர்ந்திருந்தார் என்றும் நாட்டின் ஒருமைப்பாட்டில் அவருக்கு நிறைய அக்கறையிருந்தது என்றும் திருமதி காந்தி குறிப்பிட்டார்.

தமிழ்நாடு பல துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளது இந்த வளர்ச்சியை மேலும் வளர்ப்பதில் இளைஞர்கள் ஊக்கம் கொள்ளவேண்டும் என்று திருமதி காந்தி கூறினர்.

இந்த விழாவில் முதலமைச்சர் கருணுநிதி பேசுகையில், திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியிலுள்ள புதுச்சேரியிலும், தமிழ்நாட்டிலும் திருமதி காந்தியின் பிரயாணம் வெற்றிகரமாக அமைந்தது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாகச் சொன்னர்.



மத்திய அரசின் முற்போககு நடவடிக்கைகள் யாவற்றையும் தமிழ்நாடு அரசு ஆதரிக்கும். ஆனல் அதேசமயம் எமது உரிமை



களைக் கோருவதிலும் தயங்கமாட்டோம் என்ருர். திரு கருணுநிதி தமிழ்மக்கள் திருமதி காந்தியிடம் மிகுந்த அன்பு வைத்திருக்கிருர்கள் என்ருர் அவர்.

பலதரப்பட்ட கட்சிக்காரர்களும் ஒரே மேடையில் சந்தித்துக்கொள்ளும் நல்லதோர் அரசியல் நாகரிகம் இந்தியாவில் உருவாகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமருக்கு திரு. கருணுநிதி பதினன்கு பரிசுகளைக் கொடுத்தார். திருவள்ளுவர் படம். சந்தன மரத்திலான புத்தர், மகாத்மாகாந்தி ஆகியவர்களின் சிலைகளையும் அவர் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

மனிதன் கண்டுபிடித்துள்ள எல்லா ஆயுதங்களின் ஆற்றலையும்விட பன்மடங்கு சக்தி வாய்ந்தது அஹிம்சையின் ஆற்றல்.

— மகாத்மாகாந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதி மாதம் 22-ந் திகதி (8 - 10 - 69)


## விபுலானந்த அடிகளார்

ஒரு பெரியாரின் ஞாபகத்தை நிலைநிறுத்தச் செய்வது, மக்களின் சமூகவாழ்விலே மிக முக்கியமானதோர் நிகழ்ச்சியாகும். பொதுமக்களுக்காக மேலான தொண்டாற்றிய பெரியோர்கள் ஆணையினும், பெண்ணாயினும் சரி அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்துவது, அவர்களைக் கௌரவப்படுத்துவது ஒருபுறமிருக்க, மக்கள் அவர்களுக்குத் தங்கள் நன்றியைத்தெரிவித்துத் தங்களைத் தாங்களே கௌரவப்படுத்திக்கொள்வதாகும்.

ஆகவே ஸ்ரீமத் சுவாமி விபுலானந்த அடிகளுக்கு மட்டக்களப்பிலே இன்று உருவச்சிலை நிலைநாட்டி, சிறப்பாக விழா எடுப்பது இன்றைய சமூக சரித்திரத்தில் மிக முக்கியமானதோர் சந்தர்ப்பமாகும். சுவாமிகளின் உயர்ந்த அறிவாற்றல்களைப் போற்றுவதுடன், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கல்வி, கலாசாரத்துறைகளிலே அவர்கள் செய்துள்ள பெரும் பணிகளை நாம் நினைவுகூர்ந்து அதற்காக நன்றி செலுத்திப் போற்றுவது. நமது மேலான கடமையாகின்றது.

கல்வியாளரென்ற முறையிலே அடிகள் வடஇலங்கைக்கும் கிழக்கு இலங்கைக்கும் மத்திய மாகாணத்துக்கும் மட்டுமன்றி இலங்கை அனைத்துக்குமே உயர்ந்த பணிகள் புரிந்திருக்கின்றார்கள். இலங்கைப் பல்கலைக்கழகத்திலே முதல் தமிழ்ப்பேராசிரியராகக் கடமையாற்றி அரிய சேவை செய்திருக்கின்றார். இந்தியாவிலும்அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராக இருந்து நற்பணி புரிந்துள்ளார். அவர் ''பிரபுத்த பாரதம்'' எனும் உயரிய சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து எழுதியுள்ள அரிய கட்டுரைகள் பொன்னேபோல் போற்றத்தக்கன. அவரது அக்கட்டுரைகளையும், ஆங்காங்கே அவர் பேசியுள்ள பொன்மொழிகளையும்தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவது இன்றைய மக்களுக்கு மட்டுமன்றி எதிர்காலச் சந்ததிக்கும் மிகப்பயனுள்ளதாக இருக்கும்.

அரிய ஆராய்ச்சி செய்து, அவர் எழுதி வெளியிட்டுள்ள ''யாழ் நூல்'', அவர் கலைத்துறையில் செய்துள்ள மறக்க முடியாத பெரும் பணியாகும். பல்வேறு சமயங்களையும் ஆராய்ந்தறிந்த அவர் சமரசநோக்கங் கொண்டவர். இந்து சமயத்தில் வேதாந்தம், சித்தாந்தம் இவ்விரு பிரிவுகளிலும் அவருக்கு நல்ல பயிற்சியுண்டு. ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த இப்பெரியார் ஒருசமயம் சைவ சித்தாந்த மகாநாட்டுக்கும் தலைமை வகித்தது குறிப்பிடத்தக்கது. கல்வியாளர், எழுத்தாளர், பேச்சாளர், சமய சேவையாளர் என்ற முறையிலே, சுவாமி அவர்கள் இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் ஒரு செல்வமாகப் பொலிந்தார். உண்மையிலே அவர் எழுத்துலகுக்கும் கலை உலகுக்கும் ஓர் அணிகலனாகத் திகழ்ந்தார்.

விஞ்ஞானத்துறையிலும், பல்வேறு கலைகளிலும் நல்ல பயிற்சி பெற்ற சுவாமி அவர்கள், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் இம்மூன்று மொழிகளிலும் தேர்ச்சிபெற்றவர். இலங்கையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்கும் இந்து சமயத்துக்கும், தமிழ்க்கலாச்சாரத்திற்கும் ஒரு பெரும் பலமாகத் திகழ்ந்தாரென்பதை நாம் மறக்கமுடியாது. அவர் இல்லாதிருப்பின், இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்ப் பேராசிரியர் பதவியையும் ஏற்படுத்தியிருப்பார்களா என்பதும் சந்தேகம்.

தம்மையே பொதுப்பணிக்காக அர்ப்பணித்த இத்துறவியின் வாழ்க்கை பலருக்கும் வழிகாட்டியாக இருந்து பல துறைகளிலும் நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல தொண்டாற்றத் தூண்டுகோலாக இருந்துள்ளது. அப்பேர்ப்பட்ட ஒரு பெரியாரின் ஞாபகத்தை தலைமுறை தலைமுறையாக என்றென்றும் போற்றி வளர்ப்பது நமது கடமையாவதுடன் அது நமக்கு நாமே செய்துகொள்ளும் பெரு நன்மையுமாகும்.

# பழந்தமிழரின் யாழ்க் கருவிகள்

## சுவாமி விபுலாநந்தர்

குழலும் யாழும் முதலிலே உண்டான இடத்திற்குச் செல்வோமாக. மிகமிகப் பழைய காலம். காடு சார்ந்த முல்லைநிலம். நீண்டு உயர்ந்த மரங்கள் நெருங்கியிருக்கும் சோலையொன்று கண்முன்னே தோன்றுகின்றது. சோலையின் பக்கலிலே ஒரு பசும் புற்றரையிலே பசுக்களும் கன்றுகளும் மேய்கின்றன. கார் காலம், செடிகளிலே பூக்கள் நிரம்பியிருக்கின்றன. இடையனொருவன் வருகிறான் காலிலே செருப்பு அணிந்திருக்கிறான். உறுதியான உடல்; மயிரடர்ந்த தோட்கட்டு; பால் மணம் நாறுகின்ற தலைமயிர். அரையிலே கட்டிய ஆடையின் ஒரு தலைப்பினைத் தோளில் போட்டிருக்கிறான். பல நிறமாகிய கோட்டுப் பூக்களையும், கொடிப் பூக்களையும் கலம்பமாகத் தொடுத்த மாலையொன்று அவனுடைய தோளிலே கிடக்கிறது. இடுப்பிலே ஒரு மூங்கிற் குழல் செருகப்பட்டிருக்கிறது. ஒரு கையிலே கோல்; மற்றொரு கையிலே வில் வடிவமான ஒரு பொருள்; ஒரு வில்லல்ல, பல விற்கள் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கக் காண்கின்றோம்.

### வில் யாழ்

மத்தியான வேளையாகிறது இடைச்சி ஒரு குடுவையிலே பாலிட்டுக் காய்ச்சிய கூழ் கொண்டுவருகிறாள். இடையன் கூழை உண்டு நீர் பருகுகிறான். இடைச்சியோடு சிறிது நேரம் உரையாடுகிறான். பின்பு கையிலே குழலை எடுக்கிறான். சில நாட்களுக்கு முன்பு அம்மூங்கிற் குழல் இடையனால் இசைக் கருவியாக்கப்பட்டது. தீக்கடைக் கோலினாலே புகையெழத் தீயைக் கடைந்துகொண்டான். அக்கடைக்கோலிலுள்ள தீயினாலே மூங்கிலிலே துளையிட்டான். குழலிலே பாலைப் பண் வாசிக்கிறான். இடைச்சி கேட்டு மகிழ்கிறாள். அவள் போன பின்பு வில் வடிவமான கருவியை எடுக்கிறான். அது ஒரு வில் யாழ். அக்கருவியையும் இடையன் தானே செய்துகொண்டான். எவ்வகையாகச் தார். அப்பாடலினுள்ளே 'தொடு தோல் மரீஇய வடுவாழ் நோனடி' என்பது முதல் 'புல் ஆர்வியன் புலம் போகி' என்பது வரையுமுள்ள அடிகளின் பொருளினையே யான் இங்கு விரித்துக் கூறினேன்.

### ஆற்றுப் படைகள்

பழந் தமிழ்நாட்டிலேயிருந்த நில மக்கள் குறவன், மறவன், இடையன், கடையன், நுளையன் என ஐவகையினர்; குடி மக்கள் பாணன், பறையன், துடியன், கடம்பன் என நால்வகையினர். பாணன் மனைவி பெயர் பாணினி; இவள் விறலியெனவும் படுவாள். மன்னனிடத்திலே சென்று பரிசு பெற்ற பாணன் திரும்பி வரும்பொழுது இடைவழியிலே எதிர்ப்பட்ட மற்றொரு பாணனை அம்மன்னனிடம் வழிப்படுத்துதலைச் சொல்லும் பாடல் பாணாற்றுப்படை எனப்படும். ஆற்றுப்படுத்துதல் வழிப்படுத்துதலெனப் பொருள்படும். விறலியை ஆற்றுப்படுத்தும் பாடல் விறலியாற்றுப்படை கூத்தரை ஆற்றுப்படுத்தும் பாடல் கூத்தராற்றுப்படை; பொருநரை ஆற்றுப்படுத்தும் பாடல் பொருநராற்றுப்படை. இத்தகைய ஆற்றுப் படைகளிலே யாழ் முதலிய இசைக் கருவிகள் வர்ணிக்கப்படுகின்றன. இவ்வருணனைகளாலும், சிலப்பதிகாரம், பரிபாடல், புறநானூறு, சிந்தாமணி, உதயண காவியம் முதலிய பழைய நூல்களின் உதவியாலும் நாம் பல்வகை யாழ்க்கருவிகளின் அமைப்பு நரம்புகளின் நீளம், வாசிக்கும் முறை என்னுமிவற்றை அறிந்துகொள்ளக் கூடியதாயிருக்கிறது. அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழ்ப் பகுதித் தலைவராக யான் இருந்த காலத்திலே இவ்வாராய்ச்சியை ஆரம்பித்தேன், இற்றைக்கு ஆறாண்டுகளுக்கு முன்பு சென்னை சர்வகலாசாலையின் ஆதரவிலே இப்பொருள் குறித்துச் சில விரிவுரை செய்தேன் மேலும் பெருக ஆராய்ந்து கல்கத்தா சர்வகலாசாலையின் ஆதரவில் வெளிவரும் கல்கத்தா ரிவியூ' என்னும் பத்திரிகையின் 1941ம் ஆண்டு டிசம்பர் மாத வெளியீட்டில் விரிவான வியாசமொன்று எழுதினேன். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலுமிருந்து வெளிவரும் 'செந்தமிழ்', 'தமிழ்ப் பொழில்' என்னும் வெளியீடுகளிலே இவ்வாராய்ச்சியினை விரிவுற எழுதிக்கொண்டு வருகிறேன். குறித்த பத்திரிகைகளிலே விரிவாக எழுதிய முடிவுகள் சிலவற்றை இங்கு சுருக்கமாகக் கூறுகிறேன்.

### பேரியாழ் சீறியாழ்

மிகமிகப் பழைய காலத்தில் தோன்றிய யாழ் வில் யாழ் எனக கண்டோம். அதன் பின் இருபத்தொரு நரம்புகளையுடைய பேரியாழ் தோன்றியது. ஏழு நரம்புகள் ஒரு தானமாதலினாலே பேரியாழிலே மூன்று தானங்கள் உள்ளன. ஏழு சுவரங்களின் கூட்டத்தை இக்காலத்தார் ஒரு ஸ்தாயி என்பர். மந்தரஸ்தாயி, மத்திமஸ்தாயி, தாரஸ்தாயி என இந்நாளிலே வழங்குபவற்றை முன்னோர் மெலிவுத்தானம், சமன்தானம், வலிவுத்தானம் என்றனர். பேரியாழின் ஒவ்வொரு தானத்திலுமுள்ள ஏழு நரம்புகளும் க ம ப த நி ச ரி என்றும் முறையாகநின்றன. பேரியாழின் பின் சீறியாழ் தோன்றியது. இதுவே செங்கோட்டியாழ் எனவும் படும், 'தொண்டு படு திவவின் முண்டக நல்யாழ்' என ஆசிரிய மாலை கூறுதலின் சீறியாழுக்கு நரம்புகள் ஒன்பது என அறிகின்றோம், ஏழு எனக் கூறுவாரும் உளர். பாடப்போகிற பெரும் பண்ணுக்கு ஏற்றபடி சீறியாழின் நரம்புகளுக்கு இசை கூட்டுவது மரபு. வில் யாழும் பேரியாழும் சீறியாழுமே சங்கத் தமிழ் நூல்களிலே கூறப்படுவன. சிலப்பதிகார மணிமேகலை காலத்திலே அஃதாவது இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளின் முன்னே சகோட யாழ், மகர யாழ் என வேறு இரண்டு யாழ்கள் இருந்ததாக அறிகின்றோம். சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையிலே கூறப்படுவது சகோட யாழ். ஏழாம் நூற்றாண்டிலே வாழ்ந்த திருஞானசம்பந்தப் பிள்ளையாரோடு உடன் சென்று பிள்ளையார் பாடிய தேவாரப் பாடல்களை யாழிலே வாசித்த திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார் கையிலே இருந்ததுவும் சகோட யாழ் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாருக்குச் சகோட யாழ்த் தலைவர் என்னும் பெயருண்டு சகோட யாழிலே நரம்புகள் பதினான்கு, அந்தரக் கோல்கள் பத்து, சமன் தானத்திலே நரம்பு ஏழு, அந்தரக் கோல் ஐந்து. ஆக மொத்தம் பன்னிரண்டு இராசிச் சக்கரத்திலேயுள்ள பன்னிரண்டு வீட்டிலும் இப்பன்னிரண்டினையும் நிறுத்திப் பழந்தமிழர் கணககிட்டார்கள். சகோட யாழிலே பன்னிருபாலை பிறப்பன. இப்பன்னிருபாலையிலும் இருபத்திரண்டு சுருதிகள் பிறப்பன. இவற்றினைக் கணித்தறியும் மரபினை எனது ஆராய்ச்சியிலே முறையாகக் காட்டியிருக்கிறேன். சிலப்பதிகாரக் காலத்திலே கல்லிலே புனையப்பட்ட ஓவியம் ஒன்று அமராவதி நகரிலே இருக்கிறது. இந்த ஓவியத்திலே சகோட யாழின் உருவம் காணப்படுகிறது. சகோட யாழிலும் செங்கோட்டியாழிலும் ஒற்றுறுப்பு எனப் பெரிய உறுப்பொன்று உண்டு. இதன் உதவியினாலே யாழிலே பல வித கமகங்களைத் தோற்றுவித்தல் கூடும்.

தொடரும்

# ஜயாறன் எழுதுவது

திருமதி விஜயலட்சுமிபண்டிட் இன்று முதல் முதலாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார் யாழ்ப்பாணத்துப் பொதுமக்கள் சார்பாக அவரை 'வருகவருக' என்று மாநகரசபை இன்று மாலை வரவேற்று உபசரிக்கின்றது.

திருமதி விஜயலட்சுமி ஈழத்துக்கு வருவது இது முதல் தடவையல்ல. ஏற்கெனவே அவர் வந்தபோது, யாழ்ப்பாணத்துக்கும் வருவாரென்று பிரயாணத்திட்டத்தில் அறிவித்திருந்தார்கள் ஆனால் யாரோ இடையில் குறுக்கிட்டு அவரை இங்கு வராமல் தடுத்துவிட்டார்கள்!

அதனால் யாழ்ப்பாணத்துக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. அப்படித் தடுத்தவர் ஒரு தமிழ்த்தலைவர்தானென்று பின்னர் கேள்விப்பட்டேன்.

நல்லவேளையாக இம்முறை அவர் வடஇலங்கைக்கு மட்டுமன்றி கிழக்கு இலங்கைக்கும் செல்லமுடிந்தது பெரிய காரியம். அத்துடன் யாழ்ப்பாணத்திலே மாநகரசபை இயங்கி, இம் மாதரிசியை வரவேற்க முடிவது பழைய குறையைத் தீர்ப்பதாக உள்ளது.

0 0 0

கொழும்பிலே சுகததாஸ விளையாட்டரங்கிலே அவருக்கு வரவேற்பளித்து, மகாத்மாகாந்தி ஜயந்தியை விசேஷமாகக் கொண்டாடிய காட்சிகள் மறக்க முடியாதவை. சுமார் பத்தாயிரம் பேருக்குமேல் அங்கு கூடியிருந்தனர். ஆயிரக்கணக்கான மாணவிகளின் அணிவகுப்பும், விளையாட்டுகளும், கலைநிகழ்ச்சிகளும் மனதைக் கவர்ந்தன. இவ்வளவு சிறப்பாக இவ்விழாவுக்கு ஒழுங்கு செய்து நடத்தியவர்களைப் பாராட்ட வேண்டும்.

அக் கூட்டத்திலே மகாத்மா, விஜயலெட்சுமி இவர்களைப் பற்றி பிரதமர் டட்லி சேனநாயக்கா பேசிய ஒவ்வொரு சொல்லும் அவரது உள்ளத்திலிருந்து பேசியவையாகும்.

இந்தியாவுக்கு வெளியேயுள்ள ஒரு நாட்டில், மகாத்மாவின் நூற்றாண்டு ஜயந்தி விழாவைஇவ்வளவுசிறப்பாக பிரதமர், எதிர்க்கட்சியினர் எல்லாரும் சேர்ந்து நடத்த முடிந்தது நல்லதோர் சகுனமாகும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நல்லுறவுகளை, புத்தர் பெருமானும் மகாத்மா காந்தி அடிகளும் பலப்படுத்தியதை என்றென்றும் காத்து வருவரென்பதை அந்த விழாவிலே உணரக் கூடியதாக இருந்தது.

0 0 0

இன்றுயாழ்ப்பாணத்துக்கு வரும் திருமதி விஜயலட்சுமிக்கு வயது அறுபத்தி ஒன்பதாம். பார்த்தால் அப்படிச் சொல்லவே முடியாது. கொழும்பிலே ஒரு நாளில் 10 கூட்டங்களில் பேசியுள்ளார். பின்னர் இரவில் விருந்துக்கூட்டம். இந்த வயதில் வாலிப உற்சாகத்துடனே அவர் பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வது அசாதாரணமாகும்.

அவரது வருகையில் சிறப்பாக இங்குள்ள பெண்குலத்துக்குப் புதுப்பெருமையும் உற்சாகமும் ஏற்பட்டுள்ளது. எந்தப் பொறுப்பான பதவியையும் பெண்களால் வகிக்க முடியுமென்பதற்கு ஸ்ரீமதி விஜயலெட்சுமியே நல்ல அத்தாட்சி.

0 0 0

நமது மாநகரசபையில் அதிகமான பெண்கள் இல்லாததுபற்றி ஸ்ரீமதி விஜயலட்சுமி அவர்கள் என்ன நினைக்கிறார்களோ? முந்திய சபையைப் பார்த்திருந்தால் அவருக்கு அதிக ஏமாற்றமாக இருந்திருக்கும். இப்போது தானே ஓரே ஒரு பெண்ணுக்கு இங்கு இடம் கிடைத்துள்ளது.

பெண்களே ஆட்சிசெய்ய வேண்டுமென்ற எண்ணம் தமக்கில்லை என்றும் ஆனால் பெண்கள் தமக்குரிய பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்ற முன்வர வேண்டுமென்றும் திருமதி விஜயலெட்சுமி வற்புறுத்துகிறார். அவரது வருகையில் இங்குள்ள நம் பெண்ணினம் புதிய உற்சாகமும் மகிழ்ச்சியும் பெற்றுள்ளது. கிராமசபை முதல் பார்லிமெண்ட்வரை எல்லா பிரதிநிதி ஸ்தாபனங்களிலும் தங்களுக்குரிய சம இடத்தைப் பெண்கள் வகிக்க துணிச்சலுடன் முன்வருவராயின், நமது ஊரும் நாடும் அமைதியாகவும் சுபீட்சமாகவும் இருக்க முடியுமல்லவா?

0 0 0

மடந்தை பாகத்தர்போலுமான் மறிக்கையர் போலும் குடந்தையிற் குழகர் போலுங் கொல்புலித் தோலர் போலும், கடைந்த நஞ்சுண்பர் போலுங் காலனைக் காய்வர் போலும் அடைந்தவர்க் கன்பர் போலும் ஆவடுதுறையனாரே.

—அப்பர் அடிகள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அரிய கட்டுரைகள் பொன்னே போல் போற்றத்தக்கன. அவரது அக்கட்டுரைகளையும், ஆங்காங்கே அவர் பேசியுள்ள பொன்மொழிகளையும்தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவது இன்றைய மக்களுக்கு மட்டுமன்றி எதிர்காலச் சந்ததிக்கும் மிகப்பயனுள்ளதாக இருக்கும்.

இருந்துள்ளது. அப்பேர்ப்பட்ட ஒரு பெரியாரின் ஞாபகத்தை தலைமுறை தலைமுறையாக என்றென்றும் போற்றி வளர்ப்பது நமது கடமையாவதுடன் அது நமக்கு நாமே செய்துகொள்ளும் பெரு நன்மையுமாகும்.

(8-ம் கலத் தொடர்ச்சி)

களாரை மட்டக்களப்பு வாவியுட்பாடும் நீவிர மகளிர் ஏழிசைதேர் யாழ்நூல் ஆராய்ச்சியுள் திருமனத்தை இறக்குமாறு தூண்டினர். நீரர மகளிர் எழுவர் மட்டக்களப்பு வாவியுட் தோன்றிப் பாடியதாகவும் அவர்கள் தங்களுடைய பெயர்களை முதல், இணை, பகை, நட்பு, கிளை, பகை, இணை என்னும் ஏழு நரம்புகள் எனக்கூறியதாகவும் அதுவே இந்த சிறந்த யாழ் நூலுக்கு தோற்றுவாயாக அமைந்ததெனவும் அடிகளார் கூறியுள்ளார்.

இளங்கோவடிகள் இயற்றி அருளிய சிலம்புச் செல்வத்தில் அமைந்து கிடக்கும் இசைக்கலைநுட்பமும்யாழின் கண்ணே ஏழிசை எழுப்பும் இனிய நரம்புகளின் இயல்புகளும், தமிழர்கண்ட நூற்று மூன்று பண்கள் வழங்கும் வகையும் இசைநூலை உணர்த்துவதற்கு உதவுகின்ற கணிதநூல் முறையும் ஆகிய இவற்றையெல்லாம் அமைத்து யாழ் நூலாகிய அமுத சுரபியை நமக்களித்த முத்தமிழ் முனிவன் விபுலானந்தருக்கு அவரது பிறப்பிடமாகிய காரைதீவிலே இன்று சிலை அமைக்கப்படுகிறது.

அருட்திரு விபுலானந்தர் நாமம் என்றும் வாழ்க.

## புங்குடுதீவில் அடிகளார்

ஊரதீவு, செவ்வாய்

"கருணைமிக்கவராக விளங்கியதனுல் புத்தருக்கு அடுத்த சிறந்த பௌத்தராகவும் துன்பம் செய்தவனுக்கு துரோகம் நினைக்காத காரணத்தால், தனக்கு கல்எறிந்தவனின் கைநோகிறதா என்று கேட்ட முகம்மது நபிக்கு உகந்த சிறந்த முஸ்லீமாகவும், துன்பம் செய்தவனை மன்னித்த காரணத்தால் யேசுவுக்கு அடுத்த சிறந்த கிறிஸ்தவராகவும் காந்திஜீ விளங்கினுர்.

மேற்கண்டவாறு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தி நூற்ருண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றியதவத்திரு குன்றக் குடி அடிகளார் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், மண்குடிசையில் வாழ்பவனும் மாளிகையில் வாழ்பவனும் வானத்தைப்பார்த்து ரசிக்கலாம், மக்கள் தங்களுக்குள் வேற்றுமை பாராட்டக்கூடாது காந்திகாட்டிய அகிம்சாவழியில் அனைவரும் முன்னேற வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரிஅதிபர் வண ஸ்ரனிஸ்லோஸ் பேசுகையில் பள்ளிவாசலை யூதர்கள் எரிப்பதும், புத்த விக்கிரகத்தைச் சைவர்கள் உடைப்பதும் ஒரு மதத்தினர் மறுமதத்தினரை நிந்திப்பதும், மாற்றுவதும் நாட்டில் இருந்து ஒழிக்கப்படவேண்டுயவை என்றுர்.

யாழ். நாகவிகாரை அதிபதி நந்தராமதேரோஅல்காஆலிம்சாகிப், கல்வி அதிகாரி திருமதி ஆர். எஸ். பாமர் முதலியார் செ. சின்னத்தம்பி, சிவத்திரு. ஐ. கைலாசநாதக் குருக்கள், வித்துவான் பொ. அ. கனகசபை ஆகியோருட்படப் பலர் உரையாற்றினர்.

## நன்றி நவிலல்

வரணி முன்னைநாள் கிராமத் தலைமைக்காரன் மகன், துன்னுலையை வசிப்பிடமாக்கொண்ட சிற்றம்பலம் வேலுப்பிள்ளை கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் அவர்களின் மறைவு அறிந்து ஈமச்சடங்கில் பங்குபற்றியவர்கட்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றி. திருமதி வேலுப்பிள்ளை குலேந்திரன் கட்டுபெத்தை தொழில்நுட்பக்கல்லூரி, சந்திரன், சூரியன், தெய்வேந்திரன் நாகேந்திரன், இராணி, கௌரி, நடராசபிள்ளை, சாவகச்சேரி வடக்கு கிராம சேவையாளர் குமாரசாமி ஆசிரியர் திருமதி தேவர்.

1463

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஞலே மூங்கிலிலே துளையிட்டான். குழலிலே பாலைப் பண் வாசிக்கிறுன். இடைச்சி கேட்டு மகிழ்கிறுள். அவன் போன பின்பு வில் வடிவமான கருவியை எடுக்கிறுன். அது ஒரு வில் யாழ். அக்கருவியையும் இடையன் தானே செய்துகொண்டான். எவ்வகையாகச் செய்துகொண்டான் என்று பார்ப்போம். அக்காட்டிலே குமிழ மரம் இருக்கிறது. குமிழ மரத்தின் கொம்புப் புறத்திலே வைரமும், உள்ளே துளையும் உடையது. இடையன் குமிழ மரக்கொம்புகள் சிலவற்றை வெட்டி எடுத்துக்கொள்கின்றுன். மேலும் அக்காட்டிலே மரல் என்னும் பெயரினையுடைய மற்ருெரு மரம் இருக்கிறது. அம்மரத்தின் நாரினையுரித்தெடுத்துப் பஞ்சுபோலத் தட்டிச் சுத்தம்பண்ணி மெல்லிய நூற் கயிறுகளாகத்திரித்துக்கொள்ளுகிறுன் குமிழங் கொம்பினை வில் வடிவமாக வளைத்து இரு தலையிலுந் துளையிட்டுத் துளைகளின் வழியாக மரல் நார்க் கயிற்றினை நாணுகக் கட்டுகிறுன். நாணைத் தெறிக்க ஒரு நாதம் எழுகிறது. அதனைக் கூட்டியும் குறைத்தும் காந்தாரம் என்னும் சுவரம் பேசும்படி செய்கிறுன். பின்பு மற்ருெரு வில்லிலே முன்னையதிற் குறுகிய நீளமுள்ள ஒரு நாணினைத் தொடுத்து அதை இறுக்கியுந் தளர்த்தியும் முன்னைய நரம்போடு ஷட்ஜ பஞ்சமமாக ஒத்திசைக்கும்படி செய்து நிஷாத சுரத்தைப் பிறப்பிக்கிறுன். இம்முறையே மற்ருெரு வில்லிலே மத்திம சுவரத்தைத் தோற்றுவிக்கிறுன். காந்தாரம், நிஷாதம், மத்திமம் என இக்காலத்தில் வழங்கப்படுவன பழந் தமிழ்நாட்டிலே தாரம், உழை, குரல் எனப்பட்டன. அவற்றின் பின் முறையாகத் தோன்றிய இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்பன இக்காலத்து ஷட்ஜ பஞ்சம ரிஷப தைவதமாகும். இசைகூட்டிய விற்களை நிரையாக வைத்து ஒன்றுசேரக் கட்டி நரம்புகளை முறையாகத் தெறித்து இடையன் செவிக்கினிய குறிஞ்சிப் பண்ணைத் தோற்றுவிக்கிறுன்.

இடையனுடைய வரன்முறை எனது சொந்த கனவு அல்ல. பழந் தமிழ்க் குமரி நாட்டிலே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் னிகழ்ந்த இந்நிகழ்ச்சியினை இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த கடைச் சங்கப் புலவரொருவர் கனவு கண்டு, பெரும்பாணுற்றுப்படை என்னும் பாடலிலே பொறித்துவைத்

களுக்கு முன்பு சென்னை சர்வகலாசாலையின் ஆதரவிலே இப்பொருள் குறித்துச் சில விரிவுரை செய்தேன் மேலும் பெருக ஆராய்ந்து கல்கத்தா சர்வகலாசாலையின் ஆதரவிலே வெளிவரும் 'கல்கத்தா

கூட்டுவது மரபு. வில்யாழும் பேரியாழும் சீறியாழுமே சங்கத் தமிழ் நூல்களிலே கூறப்படுவன. சிலப்பதிகார மணிமேகலை காலத்திலே அஃதாவது இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளின் முன்னே சகோட யாழ், மகர யாழ்

உதவியினுலே யாழிலே பல வித கமகங்களைத் தோற்றுவித்தல் கூடும்.

தொடரும்

விழாவைஇவ்வளவுசிறப்பாக பிரதமர், எதிர்க்கட்சியினர் எல்லாரும் சேர்ந்து நடத்த முடிந்தது நல்லதோர் சகுனமாகும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நல்லுறவுகளை, புத்தர் பெருமானும் மகாத்மா காந்தி அடிகளும் பலப்படுத்தியதை என்றென்றும்

தோலர் போலும், கடைந்த நஞ்சுண்பர் போலுங் காலனைக் காய்வர் போலும் அடைந்தவர்க் கன்பர் போலும் ஆவடுதுறையனுரே.

—அப்பர் அடிகள்.

# நாவலரின் நல்லடிச்சுவட்டில் வந்த முத்தமிழ் வித்தகப் பெருந்தகை

## பிறந்த ஊரிலே இன்று சிலையெடுப்பு விழா கோலாகலமாக நடக்கிறது

நாவலர் பெருமானது நல்லடிச் சுவட்டைப் பின்பற்றித் தமிழ் நடெங்கணும் சைவந் தழைத்தோங்கக் கலாசாலைகள் நிறுவி, வேதாந்தமுஞ் சித்தாந்தமும் வீறுகொண்டுவளர சொற்பொழிவாற்றியும், கட்டுரைகள் எழுதியும் திருப்பணி பல புரிந்தவர் யார்?

தமிழிற் புத்தம் புதிய கலைச் சொற்களை உண்டாக்கி அறிவை வளர்த்தவர் யார்? தமிழிசையை எந்நாட்டவரும் என்றும் மதிக்குமாறு அழியாப் பெரும் புகழைத் தேடித் தந்தவர் யார்?

ஏழிசை நரம்புக் கருவியாகிய மறைந்துபோன யாழை இயற்றி இசைமீட்டி இன்புற்றவர் யார்?

முத்தமிழைவளர்ப்பதற்கு இருபதாம் நூற்ருண்டிலே தனது வாழ்வை தியாகம் செய்து இரவுபகலாக இடையுருது உழைத்துப் பெரும் புகழ் படைத்து இன்பங்கண்டவர் யார்?

நாடெல்லாம் நல்லிசை பயின்று இன்பத்துய்க்குமாறு யாழ் நூல் தந்தவர் யார்?

இப்படியே கேள்விகள்பல கேட்டுக் கொண்டே போகலாம். அத்தனை கேள்விகளுக்கும் விடையாக வருபவர் அருட்திரு விபுலானந்த அடிகளே.

கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பின் தென்பகுதியிலே உள்ள காரைதீவு என்னும் கிராமத்திலே 1892-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ந் திகதி மயில்வாகனம் என்ற பெயர் கொண்டு பிறந்தாலும், அடிகளார் அவர்களை, கிழக்கு மாகாணத்திற்கு மட்டும் சொந்தமாக எவரும் கருத முடியாது. இலங்கையின் எல்லாப்பகுதியும் அவர் தமது சொந்த ஊராகவே கருதி வழ்ந்தார். தற்போதைய அரசியல் வாதிகள் தான் வடக்கையும் கிழக்கையும் இணைத்ததாகப் பெருமைப் பட்டுக் கொண்டிருந்த போதிலும், அந்தப் பெருமை முத்தமிழ் வித்தகருக்கே உரியது. தந்தை சாமித்தம்பியாரும் தாய் கண்ணம்மையாரும் தமது மகன் மயில்வாகனனை காரைதீவிலேயுள்ள திரு. நல்லரெத்தினம் ஆசிரியர் அவர்களிடம் ஏடு தொடக்கி வைத்தார்கள். திரு. குறிஞ்சித்தம்பி ஆசிரியர் அடிகளாருக்குப்பாடம் சொல்லிக் கொடுத்தார். மயில்வாகனனுர் தமது ஆசிரியர் மீது கொண்ட பக்திக்காக தனது பன்னிரண்டாவது வயதிலே குரு வணக்கமாகப் பின்வரும் பாடலைப் பாடினுர்.

## திருமதி செல்வம் தருமராஜா

''அம்புவியிற் செந்
தமிழோ டாங்கிலமும்
எனக்குணர்த்தி அறிவு
தீட்டி
வம்பு செறி வெண்கமல
வல்லியருள்
எனக் கூட்டிவைத்த
குஞ்சுத்
தம்பியென்னும் பெயருடையோன் தண்டமிழின்
கரைகண்ட தகைமை
யோன்றன்
செம்பதும மலர்ப்பாதத்
தைச் சிரத்திருத்தி
எஞ்ஞான்றுஞ் சிந்திப்
பேனே.''

அன்று தொடக்கம் அக்கிராமத்திலேஉள்ள ஊரவர்கள் அவரை குழந்தைப் புலவர் என அழைத்தனர்.

பதினுலாவது வயதிலே மயில்வாகனனுர் மட்டக்களப்புப் பட்டினத்தில் அமைந்துள்ள அர்ச்மிக்கேல் கல்லூரியில் சேர்ந்து படித்தார் இவரது கல்வித்திறமையையும், புத்திக் கூர்மையையும் கண்ட கல்லூரி அதிபர் வண. பொனல் அடிகளார் மிகவும் சந்தோஷப்பட்டார். மயில்வாகனரிடத்தில் அவர் அளவு கடந்த பற்றுவைத்திருந்தார். ஒரு நாள் எங்கள் முத்தமிழ் முனிவரைப்பற்றிக் குறிப்பிடுகையில், நான் திருமணம் புரிந்து இல்லற வாழ்க்கை வாழ்ந்திருந்தால் மயில்வாகனனைப் போலபிள்ளையைப் பெறுவதற்கு ஆசைப்படுவேன் என்றுகூறினுராம்.

ஆசிரியகலா சாலைப் பயிற்சியை 1913ல் முடித்துக் கொண்டு பொறியியற் கல்லூரியிற் சேர்ந்து பயின்ருர் 1916ம் ஆண்டு 1-ம் உலக மகா யுத்தத்தில் போர் வீரர் பயிற்சி பெற்று தியத்தலாவை, அம்பாந்தோட்டை முதலிய இடங்களில் தங்கி இலங்கை மக்களைப் பாதுகாத்து திருப்பணி செய்தார். பி. எஸ். ஸி. பட்டம் பெற்றபின்பு மட்டக்களப்பில் உள்ள அர்ச் மைக்கேல் கல்லூரியிலும் அர்ச் சென். மேரி பாடசாலையிலும் கல்வி புகட்டினுர்கிழக்கையும் வடக்கையும் இணைக்க வேண்டும்; தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் தமிழர்களே; தமிழர்கள் உள்ள இடமெல்லாம் தமிழும் சைவமும் தழைத்தோங்க வேண்டும் என்று கருதிய முத்தமிழ் வித்தகர் யாழ்ப்பாண மக்களுக்குச் சேவை செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள அர்ச் சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையேற்ருர் பின்பு மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றினுர். இவர் யாழ்ப்பாணத்திலே அதிபராகக் கடமையாற்றிய சமயம் யாழ். நகர் மக்களுக்கு செய்த சேவை அளப்பரியது. அந்தக்காலத்து யாழ்ப்பாணப் பெருமக்களுடன் ஒன்று கூடி இவா சைவ சமய வளர்ச்சிக்குப்பெரிதும் உழைத்தார். யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை அமைத்து அதில் பிரவேச பண்டித பரீட்சைகளை ஏற்படுத்தி அவை சீராக நடைபெறுவதற்குப் பெருந்துணை புரிந்தார்.

கருவிலேயே திருவமைந்த பால பண்டிதர்மயில்வாகனனுரை 1922ம் ஆண்டில் இலங்கைக்குவிஜயம் செய்த ஸ்ரீ மத்சுவாமி சர்வானந்தர் அவர்கள் இந்தியாவிற்கு அழைத்துச் சென்று சென்னையில் அமைந்துள்ள ஸ்ரீ இராமக்கிருஷ்ண மடத்தில் சேர்த்தார்கள். ஸ்ரீ இராமக்கிருஷ்ணமடத்தில் சேர்க்கப்பட்ட பண்டித மயில்வாகனனுர் பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொண்டு பிரபோத சைதன்னியர் என்ற திருநாமம் பெற்ருர். அக்காலத்திலே ஸ்ரீ இராமக்கிருஷ்ண விஜயம் என்ற பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றினுர்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரது நன் மாணவராகிய சிவானந்த அருட்குரவரது திருவடிகளை வணங்கி 1924ம்ஆண்டு சித்திரா பூரணையன்று ஞானேபதேசம் பெற்று சுவாமி விபுலானந்தர் என்ற துறவுப்பெயரையும் பெற்ருர்

நம்முன்னேர் தந்த முச்சங்க நூல்கள் பலகடல் கோளினுல் அழிந்தொழிந்தனவே என்று அடிகளார் பெரிதும் கவன்ருர்கள். உலகம் புகழ் இசை வளர்த்த பாணர்இன்று இல்லையே என்று வருந்தினுர்.கள். தமிழர் கண்ட யாழினையும் பாலைப்பண் முதலிய பண்களையும் காணுமற் கலங்கினுர்கள். செந்துறை. வெண்டுறை, தேவபாணி, வண்ணம் இவற்றை இன்றுள்ள தமிழர் தெளிந்திலரேஎன்று ஏங்கினுர்கள். வரிப்பாட்டுப்பாடி மகளிர் யாழை மீட்டி மகிழ்கின்ற நிலை மறைந்ததே என்று மனமடிவுற்ருர்கள். தமிழ் மொழிக்கு வசைகூறுவோர் தொகை கூடுகின்றதே என்று ஏங்கினுர்கள். ஏக்கமுற்ற அடிகளார்இளங்கோ அடிகளேமுத்தமிழ் வளர்க்க மீண்டும் வந்தவதரித்தது போல செயல்படலானுர்.

ஆங்கில வாணி, பூஞ்சோலைக் காவலன். விவேகானந்த ஞானதீபம் என்பவை போன்ற பல இயற்றமிழ் நூல்களை இயற்றினுர்கள். ஆங்கிலக்கவி சேக்ஸ்பியரது நாடக நூலையும் வடமொழிப் புலவர் தனஞ்செயரது தசரூபத்தையும், இளங்கோவடிகளது நாடகமுடிவுகளையும் தழுவி மதங்க சூளாமணி என்ற நாடகநூலை இயற்றினுர்கள்.

இதனை இயற்றுமுன்பு யாழ்ப்பாணப் பேரறிஞர் மத்தியில் பரமேஸ்வராக் கல்லூரியில் சேர் பொன் இராமநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஒரு தமிழ் மகாநாட்டில் அடிகளார் நாடகத் தமிழ் ஆராய்ச்சிச் சொற்பொழிவொன்றினை அழகுற நிகழ்த்தினுர்கள். இந்தச் சொற்பொழிவு நிறைவுற்றதும் இதனைப்பற்றி வியந்தெடுத்து கூற நான் இத்துறையில் எதுவும் அறிந்திலேன். இந்த அருமந்த ஆராய்ச்சி சொற்பொழிவினை நம்மத்தியில் நிகழ்த்திய சுவாமிகளை ஒரு முறை கும்பிடுகிறேன். மறுமுறையுங் கும்பிடுகிறேன் மீண்டும் ஒரு முறை கும்பிடுகிறேன். என்று பொன் இராமநாதன் துரை அவர்கள் கூறிக்கூறி மும்முறை கரங்கூப்பி வணங்கியதாக நூல்கள் கூறும் இவ்வாறு பொன் இராமநாதன் துரை அவர்களாலும் யாழ்ப்பாணப் பேரறிஞர்களாலும் வாயாரப்புகழப்பட்ட முத்தமிழ் முனிவனின் இயல், இசை, நாடகப் பேராற்றலை எடுத்துமேலும் கூறவேண்டியதில்லை.

அடிகளார் அவர்கள் நாமெலாம் இழந்த இனிய இசைத் தமிழினைப்பெற்று என்றும் அழியாப்புகழுடன் இன்புறுதற்கு யாழ் நூலை இயற்றித் தந்தார்கள். அடி

(1-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org